Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | பங்குனி-18 | 31-03-2005 | வியாழக்கிழமை | ஓசை 41


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11456)

# வடக்கு-கிழக்கில் சுனாமியால் பாதிப்புற்றோருக்கு அரசு மனிதாபிமான உதவியைச் செய்யவில்லை!

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தமிழர் உரிமை மையம் முறையீடு

(ஜெனீவா)

**சிறிலங்கா அரசாங்கம் இலங்கைத்தீவின் வடக்குக் கிழக்குப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த விதமான மனிதாபிமான உதவியையும் செய்யவில்லை. இது மனித உரிமை மீறலாகும் என ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தமிழர் உரிமை மையம் முறையிட்டுள்ளது.**

இந்த மனுவில்:-

இலங்கைத் தீவகத்தில் தமிழர் தாயகப் பகுதியில் சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்தும், ஆழிப் பேரலையால் தமிழர் தாயகப் பாதிப்பு விபரங்கள் குறித்தும் ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவிடம் தமிழர் உரிமை மையம் முறையிட்டுள்ளது.

ஜெனீவாவில் கடந்த மார்ச் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது நடைபெற்றுவரும் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் 61 ஆவது கூட்டத் தொடரின் தலைவரான இந்தோனேஷிய நாட்டின் ஐ.நா தூதுவர் மக்கரிம் விப்பிசோனிடம் தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொதுச்செயலாளர் ச.வி. கிருபாகரன் இந்த முறையீட்டு மனுவை அளித்தார். பிரான்சில் தலைமையகத்தைக் கொண்டு தமிழர் மனித உரிமைகள் மையம் இயங்கி வருகிறது. ஐ.நா. மனித உரிமைக் குழுவிடம் தமிழர் மனித உரிமைகள் மையம் அளித்த மனுவில்கூறப்பட்டுள்ளதாவது: இலங்கைத்தீவில் சிறிலங்கா அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையில் போர்நிறுத்த உடன்படிக்கை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு மூன்று வருடங்களாகியும் இன்னும் அங்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தங்கவேலாயுதபுர அரசியல் பொறுப்பாளர் ஜெயப்பிரகாஸ் மீது அதிரடிப் படை தாக்குதல்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தங்கவேலாயுதபுர அரசியல் துறைப் பொறுப்பாளர் மே.ஜெயப்பிரகாஸ் தங்க வேலாயுதபுரப் பிரதேசத்தில் தன்னுடைய அரசியல் பணி செய்து விட்டு மீண்டும் திருக்கோவிலை நோக்கி வரும்போது பி.ப 3.30 மணியளவில் காஞ்சிரங்குடா விசேடஅதிரடிப்படையினரால் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ள சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் பற்றி ஜெயப்பிரகாஸ் கருத்துத் தெரிவிக்கையில்:-

தங்க வேலாயுதபுரத்தில் இருந்து திருக்கோவில் நோக்கிவரும்போது காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படையினர் என்னை மறித்தனர்.பின்னர் என்னைச் சுற்றி ஆறு படையினரும் முகாமைச் சுற்றி அறுபது படையினரும் சூழ்ந்திருந்தனர். என்னருகே வந்த படையினர் வாகனப் பதிவுப் புத்தகம் கேட்டனர். என்னுடைய உந்துருளி புதிதாக வாங்கியது எனக் கூறினேன். அதன் பின்பு என்னுடைய தமிழீழ விடுதலைப்புலிகள் என உறுதிப்படுத்தும் இலக்கத் தகட்டைக் கழுத்தில் இருந்து வெளியே எடுத்து வீசினர். ஏன் தகட்டை வீசினீர்கள் என்று கேட்டேன் பின்னர் என்னை முகாம்

(12ஆம் பக்கம் பார்க்க)

-பெண்போராளிகள் மீதான கொலைமுயற்சி-

## அடையாள அணிவகுப்பு மீண்டும் ஒத்திவைப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடு மற்றும் கொலை முயற்சி தொடர்பான அடையாள அணிவகுப்பு இரண்டாம் முறையாக நேற்றும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் பெரியகல்லாற்றைச் சேர்ந்த முன்னாள் ராசிக்குழு உறுப்பினரான ஜோன்சன் ஜெயக்காந்தன் என்பவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கடந்த 16 ஆம் திகதி இது தொடர்பாக அடையாள அணிவகுப்பு நடைபெறவிருந்தது. மூன்று பெண் போராளிகளும் வைத்திய சிகிச்சையில் இருந்ததால் அடையாள அணிவகுப்பு நடைபெறவில்லை. இதனையடுத்து நேற்று நடைபெற இருந்த அடையாள அணிவகுப்பிலும் சாட்சிகள் பங்கேற்கவில்லை. இதனையடுத்து அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.பி.மனாப் எதிர்வரும் நான்காம் திகதிக்கு அடையாள அணிவகுப்பை ஒத்திவைத்தார்.

## பின்லாந்து வெளிவிவகாரக்குழுவை தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு சந்திப்பு

பின்லாந்தின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் ஆசியாவிற்கான தூதுவர் மிக்கோ பைகலா தலைமையிலான குழுவை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான தமிழீழ அரசியல் விவகாரக் குழுவினர் மார்ச் 29 ஆம் திகதியன்று சந்தித்துப் பேசினர்.

இச்சந்திப்பின் போது பேசிய தூதுவர் மிக்கோ, ஆழிப்பேரலைக்குப் பிந்தைய மீளமைப்புப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதை பின்லாந்து ஊக்குவிப்பதாகவும், பொதுக்கட்டமைப்பை இனியும் தாமதிக்காமல் உடனே செயற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அமைதிப் பேச்சுக்களின் தற்போதைய நிலைமை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் நடைமுறைச் சூழல்

(12ஆம் பக்கம் பார்க்க)



## மின்,பெற்றோலியத்துறை மீளமைப்பிலும் பொதுக்கட்டமைப்பு அவசரமானது

-தமிழ்க் கூட்டமைப்பினர் அரசிடம் வலியுறுத்து

மின் மற்றும் பெற்றோலியத் துறை மறுசீரமைப்புகளில் சிறிலங்கா அரசு காட்டும் வேகத்தை, சுனாமியால்பாதிக்கப்பட்ட வடகிழக்குப் பகுதியை மீளக் கட்டமைக்கும் பொதுக் கட்டமைப்பில் காட்ட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில், பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் தாமதம் மற்றும் கிழக்குப் பகுதியில் பெருகிவரும் வன்முறை ஆகியவை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் எதிர்காலம் குறித்து கேள்விகளை மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது என்றார். மின்துறையை மறுசீரமைக்க அரசு முயற்சிப்பதும், அதை மற்றொரு கட்சி எதிர்ப்பதும் பொருளாதார சிக்கல்கள் தொடர்பானவை. பொதுக் கட்டமைப்பு உருவாக்குவது என்பது

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி யினர் சென்ற வாகனம் மீது தாக்குதல்

- பொலிஸ்சார்ஜன்ட் காயம்

மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதி ஆறுமுகத்தான் குடியிருப்பு என்னுமிடத்தில் ஈ.பி.டி.பியினர் பயணம் செய்த வாகனத்தின் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தினர்.

பாதுகாப்புக் கடமைக்குச் சென்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு ஈ.பி.டி.பி. அலுவலகத்திலிருந்து செங்கலடியிலுள்ள அலுவலகத்திற்கு வாகனம் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த செங்கலடி அலுவலக ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் ரவி எனப்படும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டுப்பற்றாளர் மணியம்மாவின் வீரவணக்கக் கூட்டம்

26.12.2004 அன்று முல்லையில் ஏற்பட்ட கடல் பேரனர்த்தத்தால் சாவடைந்த மணல்குடியிருப்பு முல்லைத்தீவைச் சேர்ந்த நாட்டுப்பற்றாளர் மணியம்மா என்றழைக்கப்படும் சூசைப்பிள்ளை மார்த்தம்மா அவர்களின் வீரவணக்க நிகழ்வு நேற்று மாலை 4.00 மணிக்கு அன்னையர் முன்னணி உறுப்பினர் ச.சகிலா தலைமையில் ஆரம்பமானது. நிகழ்வின் பொதுச்சுடரை கடற்புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த அரவிந்தன், முல்லை மாவட்ட அன்னையர் முன்னணிச் செயலாளர் திருமதி. தயாளினி ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து ஈகச்சுடரினை ஆரோக்கியம் அம்மா ஏற்றிவைக்க, மலர்மாலையினை

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் சோமவன்ச

ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க கடந்த திங்கட்கிழமை இரவு இந்தியா பயணமானார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 19 ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அக்கட்சி விடுத்த அழைப்பிற்கிணங்கவே சோமவன்ச அமரசிங்க இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார். பஞ்சாப் மாநிலத்தின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தந்தை செல்வாவின் பிறந்த தினம் இன்று வவுனியாவில் நினைவு நிகழ்வுகள்

தந்தை சா.ஜேவே. செல்வநாயகத்தின் 107 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வவுனியாவில் இன்று நினைவு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் விசேட பூசை இன்று காலை 6.30 மணிக்கும், பகல் 12 மணிக்கு குருமன்காடு காளியம்மன் தேவாலயத்தில் பூசையும், மாலை 5 மணிக்கு குடியிருப்பு தூய பேதுறு ஆலயத்தில் பூசையும் அதனைத் தொடர்ந்து நினைவுரைக் கூட்டமும் நடை பெறும். ஆலய மண்டபத்தில் தந்தையின் படம் வைக்கப்பட்டு மலர் அஞ்சலியும் செய்யப்படுமென தந்தை செல்வா அறங்காவல்குழுவினர் தெரிவித்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

இரணைமடுவிற்கும்- கிளி.மாவீரர் துயிலுமில்லத்திற்குமிடையில் கந்தசாமி லிங்கேஸ்வரன் என்பவருடைய பேசுடன் பயண அனுமதி அட்டை, **840674568V** எனுமிலக்கமுடைய தேசிய அடையாள அட்டை என்பன 27.03.2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகவல்:- க.லிங்கேஸ்வரன். (சி.11559)

### விற்பனையாகின்றது

வேலுப்பிள்ளை அன்பழகன் ஆசிரியர் அவர்களது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைமாணவர்களுக்கான பரீட்சைமாதிரிவினாத்தாள்கள் ( 15 நாட்களுக்குள் ஒரு வினாத்தாள்) அத்துடன் கட்டுரைப் பொத்தகம், பரீட்சை வழிகாட்டி 2004ஆம் வருட புதிய வெளியீடு. பாடசாலைகளுக்குச் சிறப்பான கழிவு, கிடைக்குமிடம் வன்னியில் எமது விற்பனைமுகவர் பிள்ளையார் பொத்தகசாலை, கிளிநொச்சி. (சி.11591)

# இரண்டாம் கட்டமாக வீச்சுவலைகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கு இரண்டாம் கட்டமாகவும் வீச்சு வலைகள் வழங்கப்பட்டுள்ளன. என முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தலைவர் அ.மரியராசா தெரிவித்துள்ளார்.

முல்லை மாவட்ட மீள்கட்டுமான நிலையத்தினரால் நேற்று முன்தினம் இருநூறு குடும்பங்களுக்கு நானூறு வீச்சு வலைகள் வழங்கப்பட்டன.

தொடர்ந்தும் இந்த நிலயத்தினரால்வீச்சுவலைகளும், வேறு உதவிகளும் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (20)

## அடிக்கல் நாட்டல்

விசுவமடு தென்னிந்தியச் திருச்சபை வளாகத்தில் முன்பள்ளி, தையல்பயிற்சிக் கூடம்,கணினி பகுதிக்கூடம் ஆகியவற்றுக்கான கட்டடத் தொகுதியின் அடிக்கல் நாட்டு வைபவம் கடந்தஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லையாழ். மாவட்ட தென்னிந்தியத் திருச்சபை பேராயர் சு.ஜெபநேசன்நாட்டினார். (14)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேச மாதாந்த வீரமுரசு நிகழ்வும், அன்னை பூபதி



நினைவு நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இப்பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் இந் நிகழ்வில் வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

கருவேலன்கண்டல் பொது நோக்கு மண்டபத் தில் மானுருவி கமக்கார அமைப்பு செயலாளர் நாதன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பொதுச்சுடரினை கருவேலன் கண்டல் தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் பா.இரத்தினசிங்கம் ஏற்றி வைத்தார்.

அக்கிராமத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கு பெற்றோர்களும், உறவினர்களும் சுடர் ஏற்றி வணங்கினர்.

கருத்துரைகளை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லை மாவட்ட, ஊடக பேச்சாளர் சி.வேதவனம் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (05)

# சாவு அறிவித்தல்



## திருமதி. ஆறுமுகம் இலட்சுமி

**மண்ணில் 30.07.1924** — **விண்ணில் 30.03.2005**

உதயநகர் மேற்கை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட திருமதி. ஆறுமுகம் இலட்சுமி அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.நரசிங்கம் ஆறுமுகம் அவர்களது அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. ஆறுமுகம் கந்தையா (டெயிலர்) , திருமதி. சுப்பிரமணியம் செல்வம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுப்பிரமணியம், சுகந்தா, விஜயலட்சுமி ஆகியோரது அன்பு மாமியும், கிளிநொச்சி அரசாங்க அதிபர் செயலக உத்தியோகத்தரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையின் செயலாளருமான ஆ.க.கணேஸ், காளிதாசன், குலமகள்ராதை, காலஞ்சென்ற பவானி, செல்வராணி, சிதம்பரராஜா (ராஜா) ( பமிலா மின்சாரத் தொழிலகம் - கிளிநொச்சி), தெய்வானையம்மாள், ஆறுமுகம் (சின்னச்சாமி) ( சுடர் நிர்மாணிகள் செயலகம், கிளிநொச்சி, சாந்தி, நமசிவாயம் ஆகியோரின் அன்புப் பேத்தியும், பகீரதி, பிரதாப்கரன், கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களான அம்பிகா, அம்பிகைபாலன், துவாரகா, பிருந்தாவன், சர்மிளன், சர்மிளா, கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவி பத்மினி, புஸ்பநாதன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் 31.03.2005 இன்று பகல் இலக்கம் 347, காந்தி வீதி, உதயநகர் மேற்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 03.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக ஆனந்தநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**346,உதயநகர் மேற்கு,**
**கிளிநொச்சி .**
(சி11615)

**தகவல்:**
**ஆ.க.கணேஸ்,**
**பேரன்**

# United nations Development Programme
# Sustainable human development

UNDP is the UNs global Development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on thir own solutions to global and national Development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

UNDP

The UNDP Transition programme focus on economic recovery through micro finance,capacity building and participatory based planning involving partnerships with a range of stakeholders from civil society, the public sector, NGOs and other UN agencies. The project is recruiting the following national staff to help implement UNDP's post- Tsunami recovery initiatives. Details of the positions are outlined below .Duration is initially for a period of one year. Qualified Females candidates are encouraged to apply.

## POST OF FIELD ENGINEER (INFRASTRUCTURE) - Kilinochchi

**Under the supervision of the Field Coordinator:-**

* Ensure thet all community infrastructure activities are based on the needs and continuous active participation of community members throughout the planning, implementation and maintenance stages;
* Through consultations with community, plan and develop community infrastructure rehabilitation project;
* Assist in the tendering of implementing partners to assist in community infrastructure implementation , reviewing project proposals, issuing technical approval or recommending corrective measures;
* Ensure that contracting and procurement procedures undertaken by implementing agencies are conducted in compliance with UNDP procurement procedures;
* Liaise with local authorities to support and strengthen existing community infrastructure service
* Provision and stimulate a demand- responsive service;
* Support local authorities in strengthening and empowering existing community structures to participate in planning for local service Provision;
* Abide by all UN security regulations and UNDP policy and procedures;
* Perform any other duties as required.

### Required Qualification:

* University degree in Civil Engineering or related field.

### Experience:

* Minimum of 3-5 years of experience in construction projects and methodologies;
* Experience in participatory planning and implementation of community infrastructure rehabilitation projects;
* Experience in community Action planning methodologies, community mobilization would be an assets;
* Previous association with an international organization desired;
* Experience in facilitation and training desired.

### Operational skills;

* Computer skills in MS office and engineering related software;
* Ability to work as a member of a multi-disciplinary and multi- cultural team;
* Strong negotiation and interpersonal skills with good initiative and sound judgement;
* Motivated, flexible and capable of working under pressure;
* Willingness to travel within sri lanka;
* Willingness to work out of normal office.

## FIELD MONITOR (INFRASTRUCTURE) -Kilinochchi

**Under the supervision of the Field Coordinator**

* Work colsely with the implemeting partner to ensure all community infrastructure activities are based on the need and continuous active participation of community members throughout the implementation and maintenance stages;
* Assist implementation agencies in contracting and procurement procedures ensuring compliance with UNDP procedures;
* Assist in the perparation of technical drawings, BOQs and estimates;
* Monitor the oparation of the implementing agencies;
* Prepare and ensure the timely submission of monitoring and evaluation reports;
* Abide by all UN security regulations and UNDP policy and procedures;
* Perform any other duties as required.

### Required Qualification:

* National certificate of Technology (NCT) or National Diploma of Technology (NDT-civil) or any other equal technical (civil) related educational qualification

### Experience:

* Experience in community action planning and community mobilization or related field
* Experience in development of rural road,community infrastructure, minor irrigation tanks and channels development fields,preferably more than one year.

### Operational skills;

* Strong organizational and communication skills;
* Computer skills in MS office and Engineering drawing software;
* Ability to work as a member of a multi-disciplinary and multi-cultural team;
* Motivated, fiexible and capable of workingunder pressure;
* Willingness to work out of normal office hours.

(5951)

please send us a detailed CV with names of two non-related referees and contact telephone number to reach us within 10 days of this advertisement to the UNDP Transition office addresses as indicated below

7, kumaraswamy Road, Ganeshapuram, kilinochchi. Telephone 0212285957,0212285703

# இயல்பான கல்வி நடவடிக்கைக்கு இராணுவத்தினர் வழிவிடவேண்டும்!

## தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவர்கள் கோரிக்கை

(தெல்லிப்பளை)

**இராணுவக் கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள் இல்லாத இயல்பான சூழ்நிலையில் கல்வி நடவடிக்கைகளைத் தொடர சிறிலங்கா இராணுவத்தினர் வழிவிடவேண்டும் என யாழ்.தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியானது பலாலிபடைத்தளத்தின் இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்துள் அமைந்து காணப்படுகிறது.

இப்பாடசாலை இயங்குவதற்கு சிறிலங்கா படையினர் அனுமதித்துள்ள போதும் அப்பாடசாலைச்சூழலில் உள்ள இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலயங்களையோ இராணுவ நிலைகளையோ அகற்றவில்லை.

இந்நிலையில் இயங்கி வரும் இப்பாடசாலையில் கல்வி கற்பதற்குச் செல்லும் மாணவர்கள் பலவித இராணுவ அச்சுறுத்தல்களுக்கும், சோதனைக் கெடுபிடிகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

இதனால் மாணவர்கள் இயல்பான கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாதுள்ளமையைக் காரணம் காட்டியே இக் கோரிக்கையை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவர்கள் விடுத்துள்ளனர். தமது கோரிக்கைகளுக்கு அரசு மதிப்பளிக்காவிட்டால் தாமும் போராட்டங்களில் ஈடுபட நேடும் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். (33)

# புத்தூர் சந்தியில் வாள் வெட்டு; இரு இளைஞர்கள் படுகாயம்

(தென்மராட்சி)

தென்மராட்சி புத்தூர் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இரு குழுக்கிடையே ஏற்பட்ட மோதலில் இருவர் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

வரணி குடமியனைச் சேர்ந்த ஆறுமுகம் சிவகரன் (வயது-22), தாவளை இயற்றாலையைச் சேர்ந்த கந்தசாமி சிறிகாந்தன் (வயது-27) ஆகிய இருவருமே இச்சம்பவத்தில் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் உடனடிச் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனாவைத்தியசாலைக்கு அனுப்பட்டனர். (28)

# திருநெல்வேலிப் பகுதியில் மின் விநியோகம் சீரில்லை

(திருநெல்வேலி)

யாழ்.நகரையும் அதனை அண்டியுள்ள திருநெல்வேலிப் பகுதிக்குமான மின் விநியோகம் அடிக்கடி தடைப்படுவதனால் அப்பகுதி மக்கள் வெகு சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இம்மின்சாரம் திடீர் திடீரென தடைப்படுவதால் மின்சார உபகரணங்களும் பழுதடைந்துபோவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்டோர் இவ் விடயத்தில் கவனம் செலுத்தவேண்டுமென பாதிக்கப்பட்டோர் கோரியுள்ளனர். (33)

# யாழ்.சிறைச்சாலையில் கைதிகளுக்கு வெப்பு நோய்

(யாழ்ப்பாணம்)

யாழ்பாணத்தில் நிலவி வரும் கடுமையான வெப்ப காலநிலை காரணமாக யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு கொப்பளிப்பான், அம்மை, சிரங்கு போன்ற வெப்பு நோய்கள் பரவத் தொடங்கியுள்ளன.

யாழ்.சிறைச்சாலையில் நிலவி வரும் இடநெருக்கடி நிலைமைகள் காரணமாக இந்நோய் மிக வேகமாகப் பரவி வருகின்ற போதும் அதனைக்கட்டுப்படுத்த அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகிறது. (33)

## தென்மராட்சி எழுதுமட்டுவாள் வடக்கு

# மருதங்குளம் இராணுவமுகாம் பாரிய அளவில் விஸ்தரிப்பு!

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள் வடக்கு மருதங்குளம் படைமுகாம் பாரிய அளவில் விஸ்தரிக்கப்பட்டு வருவதுடன் புதிய அரண்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

படைமுகாமுக்குள்ளேயே பாரிய குழிகள் வெட்டப்பட்டு பதுங்கு அரண்களும்,பதுங்கு குழிகளும் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும் இப்பிரதேசத்திற்கு புதிய படையணிகளும் கொண்டு வரப்பட்டிருப்பதுடன், இரவு வேளைகளில் படையினர் பாரிய பயிற்சி நடவடிக்கைகளிலும். ஈடுபட்டு வருகின்றனர்.

நடு இரவு நேரத்தில பாரிய வெடிகுண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டும் படையினர் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

இதனால் இரவுவேளைகளில் பெரும் பயப் பீதியுடன் இப்பிரதேசமக்கள் காணப்படுகின்றனர். (28)

# பல்கலை மாணவர் ஒன்றியம்; நாளை பகிஷ்கரிப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் நாளைய தினம் அடையாள பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். மருத்துவப் பீட மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாகவே இந்தப் பகிஷ்கரிப்பு நடத்தப்படவுள்ளது.

நேற்று நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் சில தீர்மானங்களும் இக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளதுடன் மாணவர் ஒன்றியத்தினால் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

கூட்டத்தீர்மானத்தின் பிரதிகள் அனைத்துப்பீடாதிபதிகள், பல்கலைக்கழக ஆசிரியர்சங்கம், பல்கலைக்கழக ஊழியர் சங்கம், சிரேஷ்ட மாணவ ஆலோசகர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன. (36)

# பாடசாலை மாணவர்களின் குடிநீர்க் கிணறு மாசடைந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மணிக்கூட்டு வீதி பெருமாள் கோயிலுக்கு முன்பாக அமைந்துள்ள சன்மார்க்க மகாவித்தியாலயத்தின் மாணவர்கள் பயன்படுத்தும் குடிநீர்க்கிணறு மாசடைந்து காணப்படுகிறது.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட 1927ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இக்குடிநீர்கிணற்றின் உட்பகுதிகள் சிதைவடைந்ததால் கழிவு நீர் கிணற்றுக்குள் கசிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து இப்பாடசாலை நிர்வாகமும், அதிபரும் பல தடவைகள் யாழ்.வலயக்கல்வி அலுவலகத்திற்கு தெரிவித்த பொழுதும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (28).

# பல்கலைக் கழக ஊழியர் சங்கம் பாதிக்கப்பட்ட மாணவருக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான அபிவிருத்திப் புனர்வாழ்வு உதவிகளை வழங்குவதற்காக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் 2லட்சத்து 17 ஆயிரத்து 130 ரூபா நிதியை வழங்கியுள்ளது. பல்கலைக்கழக ஊழியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட இந் நிதியானது சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கணணனிடம் கையளிக்கப்பட்டது. (33)

# 110 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இவ்வாண்டு அமுல் செய்யப்பட்டிருக்கும் நியாப் திட்டத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகளுக்கென நூற்றுப்பத்து மில்லின் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பத்து ஆண்டுக்குரிய திட்டங்களைக் கொண்டுள்ள இரண்டாம் கட்டநியாப் திட்ட அமுலாக்கலில் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் திட்ட அமுலாக்கல் நடவடிக்கைகளுக்காகவே இந் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (33)

# தட்டச்சு பயிற்சிப் நெறி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் பகுதியைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கான தட்டச்சுப்பயிற்சி நெறிகளை பயிற்றுவிக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனடிப்படையில் இப்பகுதிகளில் பாடசாலைக்கல்வியை முடித்துவிட்டு வீடுகளில் வேலை வாய்ப்புகளுக்காகக் காத்திருப்போருக்கே இப்பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (33)


# சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தரத்தை மேம்படுத்த பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தரத்தை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

அந்த அடிப்படையில் யாழ். மாவடடத்தில் பணியாற்றும் 96 சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான வதிவிடப் பயிற்சிகளை இந் நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர். சமுர்த்தி உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை பூரணபயன் மிக்கதாக்கும் நோக்குடனேயே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (33)





யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் தெருவெளி அரங்கச் செயற்பாட்டுக்குழுவினர் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அரங்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமையை படத்தில் காணலாம்.

# அடையாள அட்டைகள் வந்து சேர்ந்தன

யாழ்.தென்மராட்சி பிரதேசத்திலிருந்து தேசிய அடையாள அட்டைகளைப் பெற விண்ணப்பித்தோரில் ஒரு தொகுதியானோருக்கு அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

இவ் அடையாள அட்டைகளை சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது கிராமசேவையாளர்களூடாகப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(33)

# தமிழ் மக்கள் தமது போராட்டத்தின் மூலம் பெரு வெற்றிகளைக் கண்டவர்கள்

## தூயவன் அரசறிவியல் கல்லூரியைச் சேர்ந்த அரசண்ணா

(விசுவமடு)

**பேரெழுச்சிக் குழுவின் காலத்தில் தமிழ்மக்கள் பல போராட்டங்களை நடத்தினார்கள். இதன் மூலம் பெரு வெற்றிகளைக் கண்டார்கள். இதனால் எமது நாட்டிலுள்ள பிரச்சினை வெளி உலகிற்கு போய்ச் சேர்ந்தது. இதனால் பல வழிகளிலும் வெற்றி கிடைத்தது என தூயவன் அரசறிவியல் கல்லூரியைச் சேர்ந்த அரசண்ணா தெரிவித்துள்ளார்.**

பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரசண்ணா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு வடிவங்களில் மக்கள் பங்களிப்பு




கலைவாணன் உரையாற்றுகையில்:- (படம் வதனன்)

இருந்து வந்த வரலாற்றுக் காலத்தில் இப்போதய தேசிய எழுச்சிப் பேரவையினர் ஆரம்பத்தில் சிற்றூரவையாக இயங்கி வந்தனர். பின்பு போர் எழுச்சிக்குழுவாக வடிவெடுத்து இயங்கி வந்தனர். தற்போதைய சமாதான காலத்தில் தேசிய எழுச்சிப் பேரவையாக மாற்றமடைந்து இன்று இயங்கி வருகின்றது என்றார்.

பேராளர் சங்கம நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பரந்தன் இந்து மகாவித்தியாலத்தில் பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் எஸ். நாகேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை கண்டாவளை கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ச.வின்சன் ஏற்றிவைத்தார். இதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை பெருந்தோட்டப் பகுதிப் பொறுப்பாளர் து.நக்கீரன் ஏற்றிவைத்தார். தியாகி அன்னை பூபதி அவர்களது திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரினை தமிழீழ நிர்வாக சேவை கிளி நொச்சி மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் ர.ராதை ஏற்றி வைத்தார்.

சங்கம நிகழ்வில் கருத்துரைகளை பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் நாகேந்திரம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை, தூயவன் அரசறிவியல் கல்லூரியைச் சேர்ந்த அரசண்ணா மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. கலை வாணன், கண்டாவளைக் கோட்டக் கல்வி அலுவலர் வீ.இராஜகுல சிங்கம், பாடசாலை அதிபர்கள், கண்டாவளை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐங்கரவேல் ஆகியோர் வழங்கினர். இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் அருணா,காப்பகப் பொறுப்பாளர் அ. முத்து மற்றும் பரந்தன் பிரதேச ஊரக தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் கிராமங்களில் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. (46)



ஸ்கந்தபுரம் - கோணாவில் பிரதான வீதியில் உள்ள நீர்ப்போக்கி உடைந்ததால் ஏற்பட்ட குழி பல மாத காலமாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாதுள்ளது. இதன் காரணமாக இவ்வீதியால் பயணிப்போர் விபத்தில் சிக்க நேரிடுகிறது. (படம் :-சோதி)

# மனையியல் கண்காட்சி

(அலுவலக செய்தியாளர்)

கிராம அபிவிருத்தித் திணைக்கள அனுசரணையுடன் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் செல்வாநகர் மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவிகளினால் நடாத்தப்பெற்ற தையல் மனையியல் கண்காட்சி நேற்று முன்தினம் செல்வாநகர் பொழுது போக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

கரைச்சி பிரதேச செயலர் செல்வி க.சுலோஜினி தலைமையில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு ஆரம்பமான மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கேற்றலை தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியினை செல்வாநகர் ஊரகவளர்ச்சிப் பொறுப்பாளர் பாரதிராஜ் ஏற்றிவைக்க, கிளி.மாவட்ட மேலதிக அரசஅதிபர் நா.வேதநாயகன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு தையல் மனையியல் கண்காட்சியினை சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டி ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் கிளி.மாவட்ட பிரதேச செயலர் தலைமைப் பீடம் செல்வி வே.ஜெயராணி , கிளி.மாவட்ட கிராம உத்தியோகத்தர் திருமதி க.சிவராசா, செல்வாநகர் கிராம சேவை அலுவலர் க.தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கியதுடன், பயிற்சிகளில் முதலிடம் பெற்றவர்கள் மற்றும் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தனர். நிகழ்வின் ஒழுங்கமைப்பினை கிருஸ்ணசிவம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

-தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால்-

# திருக்கோவில் பொலிஸ் நிலையத்திற்கு சிறுகுற்றப்பிரிவுக்கான அலுவலகம் அமைப்பு

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தின் இடத்தேவைக்குறைவில் ஓர் தேவையைப் பூர்த்திசெய்யுமுகமாகவும், அங்கு செல்லும் மக்களிற்கான சேவையினை தாமதமின்றி நிறைவு செய்யும் நோக்கோடும் சிறுகுற்றப் பிரிவிற்கான ஓர் அலுவலகம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. சுனாமிப் பாதிப்பின் பின் பொலிஸ் நிலையத்திற்கு சேவைகளைப் பெறும் நோக்கோடு அதிகளவான மக்கள் வருகின்றனர். அவர்களை ஓர் இடத்தில் அமர்த்தி அவர்களது வேலைகளை இலகுபடுத்த ஓர் இடம் இல்லாமல் இருந்து வந்தது, அக்குறையை நிவர்த்திக்கும் முகமாகவும், பொறுப்பதிகாரியின் வேண்டுகோளிற்கிணங்கவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் இவ்வலுவலகம் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

# சமூக சீர் கேடுகள் குறித்து வவுனியாவில் எச்சரிக்கைச் சுவரொட்டி

(செட்டிகுளம்)

வவுனியா பகுதியில் சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டு வரும் நபர்கள் தமது நடவடிக்கைகளினை 15 நாட்களுக்குள் நிறுத்தாத பட்சத்தில் அவர்கள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள் என்று சீர் திருத்தக்குழு ஒன்றினால் வவுனியாவில் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதுடன், அந்த சுவரொட்டி சிறிதாக பதிப்பு செய்யப்பட்டுள்ளதுடன் வவுனியாவின் பிரதான இடங்களிலும், மகளிர் பாடசாலைகளை அண்டிய பிரதேசத்திலும் ஒட்டப்பட்டுள்ளது. வீதியில் சேட்டை புரிபவர்கள், வீதி மோதலில் ஈடுபடுபவர்கள், பாலியல் துஷ்பிரயோகம் செய்பவர்கள், விபச்சாரம் செய்பவர்கள். அரைகுறை ஆடை அணிந்து கொண்டு திரிபவர்கள், புகை பிடிக்கும் பாடசாலைச் சிறுவர்கள் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ள அவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்கள் தமது சகல நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டுமென்றும் ஆண், பெண் என்றோ, மாணவ மாணவிகள் என்றோ பார்க்கப்பட மாட்டாது என்றும் தண்டனை பொதுவாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சமுதாய சீர் கேட்டில் ஈடுபட்டதாக தெரிவித்து மூன்று இளைஞர்கள் வெவ்வேறு இடங்களில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் அந்தச் சுவரொட்டியில் தெரிவிக்கப்படுகிறது. மாலை நேரங்களில் வீதிகளில் நின்று பெண்களுக்கும், மாணவிகளுக்கும் இடையூறு ஏற்படுத்துவதாகத் தெரிவித்து பொலிசார் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததன் காரணமாக வீதிகளில் அலைந்து திரியும், வீதிச் சேட்டை புரியும் பலரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு எச்சரிக்கப்பட்டதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே வவுனியாவில் சமூக விரோத செயல்களில் ஈடுபட்டுவருவதாக பதினைந்து பேரின் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டு இருந்தமையும் அதில் மூன்று பேரே சுட்டுக் கொலை செய்யப்பட்டு இருந்தமையும்; குறிப்பிடத்தக்கது. இப்பொழுது இவ்வாறு துண்டுப் பிரசுரம் அதிகளவில் ஒட்டப்பட்டுள்ளது. (21)

# பாதிக்கப்பட்ட மாணவருக்குதவ "நியூடோங்" நிறுவனம் ஆலோசனை

(அலுவலக செய்தியாளர்)

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான உதவித்திட்டம் குறித்து ஜரிஸ் நாட்டின் "நியூடோங்" என்ற அமைப்



பின் உறுப்பினர்கள் இருவர் முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிமனையில் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளனர். ஜரிஸ் நாட்டைச் சேர்ந்த பிறண்டன்ஸ் ஜோன் மற்றும் அங்கு வசிக்கும் ஞானேந்திரம் ஆகிய இருவருமே மேற்படி சந்திப்பில் கலந்து கொண்டனர். இவர்கள் முல்லைத்தீவுப் பகுதியில் சுனாமி மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உதவிபுரியும் நோக்குடன் அப்பகுதிப் புள்ளிவிபரங்களை வலயக் கல்விப்பணிப்பாளரிடம் கலந்துரையாடிப் பெற்றுக் கொண்டு உதவிகளைச் செய்ய முன்வந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் வலயகல்விப் பணிப்பாளர் ப.அரியரட்ணம் மற்றும் முல்லைத்தீவுப் பகுதி அதிபர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (கு.08)

# விசேட பொதுக் கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நெல்லிஸ்ரார் ஹோட்டலில் நடைபெற உள்ளது. சீனா செல்லும் அங்கத்தவர்களுக்கான அறிவுரைகளும் வழங்கபபடவுள்ளதால் அனைத்து இயக்குநர் சபை உறுப்பினர்களையும் சகல சம்மேளன உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு வவுனியா மாவட்ட வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



கட்டாக்காலி மாடுகளின் தொல்லை காரணமாக கிளிநொச்சி நகர ஏ-9 பிரதான வீதிகளில் வாகன விபத்துக்கள் ஏற்படக் கூடிய ஏது நிலை தோன்றியுள்ளது. தினமும் மாலை நேரங்களில் கிளிநொச்சி ஏ-9 பிரதான வீதியில் சுதந்திரமாக உலா வரும் மாடுகளைப் படத்தில் காணலாம் (சோ)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான கொடுப்பனவுகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மக்கள் வங்கிமூலமான சுனாமி நிதிக் கொடுப்பனவு எதிர்வரும் இரண்டாம், மூன்றாம் திகதிகளில் வழங்கப்படவுள்ளதாக முல்லை. மக்கள் வங்கி முகாமையாளர் தெரிவித்தார். முல்லை.யில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் நீடித்த கருமபீடத்தில் வைத்து வழங் கப்படவுள்ள நிதி இரண்டாம் திகதி கோவில்குடியிருப்பு கிராம மக்களுக்கும், மண்றகுடியிருப்பு கிராம மக்களுக்கும், வண்ணாங்குளம் கிராம மக்களுக்கும் வழங்கப்படவுள்ளது. மூன்றாம்திகதி கள்ளப்பாடு வடக்கு தெற்கு கிராம மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் பணம் பெற வரு வோர் தற்காலிக அடையாள அட்டைகளையாவது கொண்டுவருமாறும் வங்கி முகாமையாளர் கேட்டுள்ளார். (20)

# வீதியைத் திருத்த கோரிக்கை

(கிளிநொச்சி)

திருவையாறு-இரத்தினபுரம் வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது. திருவையாறு இரண்டாம் பகுதியினூடாக இரத்தினபுரம், டிப்போச் சந்தி வரையான வீதியே மிக நீண்ட காலமாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப் படுகின்றது. எனவே இவ்வீதியை புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனப் பொது மக்கள் கேட்டுள்ளனர். (15)

# பகிடிவதை காரணமாக மேலும் ஒருவர் இடைநிறுத்தம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியில் முதலாம் வருட ஆசிரிய பயிலுநர்கள் மீது பகிடிவதை செய்த இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்களில் மேலும் ஒருவர் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கல்லூரி ஒழுக்காற்றுச் சபை அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வரை பகிடிவதை நடவடிக்கையில் ஈடுபட்டவர்களாக இனங்காணப்பட்ட ஆறுபேர் கல்லூரியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் கல்லூரி ஒழுக்காற்றுச் சபை மேலும் தெரிவித்துள்ளது. (10)

# இந்தோனேஷியாவில் மீண்டும் பூகம்பம்; அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் எச்சரிக்கை!

## -பாரியளவில் தாக்கம் ஏற்படாதென எதிர்பார்ப்பு

(சிட்னி)

**இந்தோனேஷியா பகுதியில் மீண்டும் பூமி அதிர்ச்சி ஏற்படும் என்று அவுஸ்திரேலியாவின் பூகம்பவியல் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பம் காரணமாகவும் நேற்று முன்தினம் ஏற்பட்ட பூகம்பம் காரணமாகவும், பூகோள ரீதியான அழுத்தத்தின் அளவு உயர்ந்




திருப்பதால் இந்தப் பகுதியில் மூன்றாவது பூகம்பம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இன்னும் மூன்று மாதங்களுக்குள் இந்தப்பூமியதிர்ச்சி ஏற்படும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி சுமாத்திரா கடல் பகுதியில் பூமிக்கு அடியிலிருந்த மிகப்பெரிய பாறைத் தட்டு மேலிருந்து கீழாக உடைந்து ஒன்றின் அடியில் மற்றொன்று சென்றதால் பூகம்பம் ஏற்பட்டு அதன் காரணமாக சுனாமி அலைகள் உருவாகின. இதுபோலவே இப்போதும் அழுத்தத்தின் காரணமாக கடலுக்கு அடியில் உள்ள பாறைத் தட்டு மேலிருந்து கீழாக உடைந்ததால் பூகம்பம் ஏற்பட்டுள்ளது என்றும் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

இந்தப் பூகம்பத்தின் போது அவுஸ்திரேலிய கடல் பகுதியின் அடியில் உள்ள பாறைத் தட்டு சுமாத்திரா கடல் பகுதியில் உள்ள பாறைத்தட்டின் அடியில் புகுந்து இருக்கக்கூடும் என்று கருதுவதாக அவுஸ்திரேலிய பூகம்பவியல் விஞ்ஞானி பில்கும்மின்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி சுனாமி அலைகளை ஏற்படுத்திய பூகம்பத்துக்குப் பிறகு இந்தோனேஷியாவில் தொடர்ந்து நில நடுக்கங்கள் ஏற்பட்டு வந்தன. அப்படி ஏற்பட்ட நில நடுக்கங்களில் பெரியது தான் நேற்று முன்தினம் ஏற்பட்ட பூகம்பம் என்று சில விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

எனவே இனிமேல் அந்தப் பகுதியில் சுனாமி அலைகளை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு பெரிய அளவிலான பூகம்பம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்று ஹவாயில் உள்ள சர்வதேச சுனாமி தகவல் மையத்தின் இயக்குநர் லாரா கோங் கூறியுள்ளார்.

## அண்மைய பூகம்பமையப் பகுதிகள்





## மூன்றாவது நகரைக் கையளிக்க இஸ்ரேலிய அரசு தயக்கம்

பலஸ்தீனத்துக்கு மேற்குக்கரைப் பகுதியில் உள்ள கல்கிலியா நகரை ஒப்படைக்கும் பணியை தாமதப்படுதத இஸ்ரேல் முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே அளிக்கப்பட்ட இரு நகரங்களில் பாதுகாப்புப் பணியை மேற்கொள்ள பலஸ்தீனம் தவறிவிட்டதாகக் கூறி மற்ற நகரங்களை ஒப்படைப்பதில் இஸ்ரேல் தாமதம் காட்டி வ்ருகிறது. கடந்த மாதம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தங்கள் கட்டுப்பாட்டில் 'உள்ள ஐந்து நகரங்களை மீண்டும் பலஸ்தீனத்திடம் ஒப்படைக்க இஸ்ரேல் ஒப்புக்கொண்டது.

அதன்படி ஜெரிகோ மற்றும் துல்காரெம் நகரங்களை இஸ்ரேல் ஒப்படைத்தது. இதைத் தவிர ரமல்லா மற்றும் பெத்லஹேம் நகரங்களையும் ஒப்படைக்க இஸ்ரேல் ஒப்புக்கொண்டது.




பிலிப்பைன்ஸ் அரசு பெறுமதிசேர்வரியை (VAT) அதிகரித்திருப்பதை எதிர்த்து மணிலாவில் ஆர்ப்பாட்டம் நடத்தும் மக்கள்.

# ஏமன் தலைநகரில் தீவிரவாதிகள் தாக்குதல் எட்டுப் பொலிசார் பலி; பலர் படுகாயம்

## இவ்வாரத்தில் நடந்த இரண்டாவது சம்பவம்

(சானா)

ஈராக்கில் மறு சீரமைப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் அமெரிக்க இராணுவத்திற்கு ஆதரவாக ஏமன் தனது இராணுவத் வீரர்களை அனுப்பிவைத்துள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏமன் நாட்டில் ஒரு தீவிரவாத இயக்கம் வன்முறைத் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த நிலையில் தலைநகர் சானா அருகில் தீவிரவாதிகள் நேற்று ஒரு பொலிஸ் நிலையம் மீது திடீர்த் தாக்குதல் நடத்தினார்கள் தீவிரவாதிகளுக்கும் பொலிசாருக்குமிடையே நீண்ட நேரம் துப்பாக்கிச் சண்டை நடத்தது இதில் எட்டுப் பொலிசார் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். தீவிரவாதிகள் தரப்பில் மூவர் பலியாகியுள்ளனர்.

ஏற்கனவே கடந்த திங்கட் கிழமையும் இதே போல ஒரு பொலிஸ் நிலையம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஏழு பொலிசார் கொல்லப்பட்டனர் அப்போது நடந்த மோதலில் பத்துத் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்தத் தீவிரவாத இயக்கத்தின் தலைவர் உசேன் அல் ஹவுதி இரு மாதங்களுக்கு முன்பு பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார் இதைத் தொடர்ந்து அவரது தந்தை இந்த இயக்கத்திற்கு தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்



சூடானில் டார்பார் பிராந்தியத்தில் இடம்பெயர்ந்த பாடசாலைச் சிறுவன் தனது தற்காலிக பாடசாலைக் கொட்டகையில் அடுத்த வகுப் பறையை மறைவுகளினூடாக அவ தானிக்கிறான்.



பாக்தாத் அருகேயுள்ள அமெரிக்க இராணுவ முகாம் ஒன்றினுள் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் எழும் புகை மண்டலத்தை படத்தில் காண்க. இது தொடர்பான மேலதிக விபரங்கள் வெளியாகவில்லை

# 70 தூதரக அதிகாரிகளை கென்யா திருப்பியழைப்பு

## -செலவைக்குறைக்கும் நடவடிக்கை

(நைரோபி)

வெளிநாட்டிலுள்ள தூதரகங்களால் ஏற்பட்டுள்ள அதிக செலவு மற்றும் கடனைக் குறைக்கும் வகையில் பல்வேறு தூதரகங்களில் பணியாற்றும் எழுபது பேரை கென்ய அரசு திருப்பியழைத்துக் கொண்டுள்ளது. இதன் மூலம் நடப்பு நிதியாண்டில் அரசுக்கு சுமார் ரூபா 37 கோடி செலவு குறையும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது 38 நாடுகளில் கென்யாவின் தூதரகங்கள் செயற்பட்டு வருகின்றன. அவற்றில் பணியாற்றும் எழுபது பேர் திருப்பியழைக்கப்பட்டுள்ளனர். ஆனால் தூதர்கள் எவரும் திரும்பியழைக்கப் படவில்லை. பல்வேறு நாடுகளில் உள்ள தூதரகங்களில் சம்பளம், வாடகை இதர படிகள் உள்ளிட்டவை சில காலமாக தரப்படாததால் தூதரகம் தரவேண்டிய நிலுவைத் தொகை அதிகமாகியுள்ளது. இது விரைவில் சீராகும் என்று அதிகாரி நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது திருப்பியழைக்கப்பட்ட உள்நாட்டிலேயோ அல்லது தேவைப் படும் நாடுகளிலேயோ பணிக்கு அமர்த்தப்படுவார்கள் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன.


# ருமேனிய நாட்டு ஊடகவியலாளர்கள் பாக்தாத்தில் தீவிரவாதிகளால் கடத்தல்!

(பக்தாத்)

பாக்தாத் நகரில் ருமேனிய நாட்டைச் சேர்ந்த மூன்று ஊடகவியலாளர்களை இப்போது தீவிரவாதிகள் கடத்திச்சென்றுவிட்டனர். மேரி ஜூன், கியான்,சோரின், துமித்ரு, ஒவிடியூ ஆகிய மூன்று பேரும் ஈராக் பிரதமர் அல்லாவியிடம் பேட்டி எடுத்து விட்டு விடுதிக்குத் திரும்பிக் கொண்டிந்த போது துப்பாக்கி முனையில் அவர்களை தீவிரவாதிகள் கடத்திச்சென்றுள்ளார்.

ஈராக்கில் ருமேனிய ராணுவத்தினர் 800 பேர் இருக்கிறார்கள். மேலும் 100 பேரை அனுப்ப ருமேனிய அரசு முடிவு செய்துள்ளது. இந்த இராணுவத்தினர் அனைவரையும் வாபஸ் பெறக்கோரி தீவிரவாதிகள் ஊடகவியலாளர்களைக் கடத்திச் சென்றுள்ளனர்.

ஈராக்கில் உள்ள வெளிநாட்டவர்களை தீவிரவாதிகள் கடத்திச் சென்று பணயக்கைதிகளாக வைத்திருப்பதும், கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் அவர்களின் தலையைத் துண்டித்துக் கொலை செய்வதும் தெரிந்ததே.




ரஷ்ய தயாரிப்பான கியூபா ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று வெனிசுவெலாவில் சிமன் போலிவார்ஸ் விமான நிலைய ஒடு பாதை அருகே கீழே விழுந்து. விபத்துள்ளானது. இதில் 30 பயணிகள் காயமடைந்தனர். விமானம் கீழே விழுந்து கிடப்பதைப் படத்தில் காணலாம்.

தற்பொழுது ஜே.வி.பியின் அரசியல் காய் நகர்த்தல் என்ன? எதைத் தேர்ந்தெடுத்துள்ளது? அரசியலில் அதற்கு ஏற்படும் தாக்கங்களை நாங்கள் ஆராய வேண்டும். முதலில் சனாதிபதிக்கும் ஜே.வி.பியினருக்கும் ஏற்பட்டுள்ள பகிரங்க அரசியல் மோதல்கள், இந்த மோதலுக்கு சனாதிபதி தனியாகத் தீர்மானம் எடுப்பது முதற்காரணமாக உள்ளது. கூட்டு அரசு ஏற்பட்ட பொழுது ஜே.வி.பியினருக்கு இருந்த மரியாதை இப்பொழுது கிடையாது. அரசாங்கம் இப்பொழுது ஜே.வி.பி யுடன் கலந்தாலோசிக்காமல் எல்லாத் தீர்மானங்களையும் மேற்கொண்டு வருகிறது.

இரண்டாவதாக சுனாமி புனர்நிர்மாண



சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாகும். சுனாமி புனர்நிர்மாண வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக பொது உடன்பாட்டுக்கு வந்து மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது, ஆனால் சர்வதேச நிறுவனங்கள் யாவற்றையும் இலங்கை நாட்டுக்கு சதி செய்யும் ஒரு கும்பலாகவே ஜே.வி.பியை கருதுகிறது. ஆனால் அரசாங்கம் அவர்களுடன் மேலும் ரகசிய உறவுகளை வளர்த்துக்கொள்வதுடன் அவர்களின் கூற்றுக்கு செவிமடுத்த வண்ணம் உள்ளது. கடைசியாக சமஷ்டி ஆட்சிமுறையை அமுல்படுத்தப் போவதாக சனாதிபதி தற்பொழுது பகிரங்கமாகவே கூறி வருகிறார். ஜே.வி.பியினரோ சமஷ்டி ஆட்சி முறையை அமுல்படுத்தினால் முற்றாக அதை எதிர்ப்போம் எனக் கூறி வருகின்றனர்.

இந்தக் காரணங்களுக்கிடையில் ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து விலகப்போவதில்லையென அதன் தலைவர் சோமவன்ச கூறியுள்ளார். ஜே.வி.பி யினரின் அரசியல் கொள்கைகளுக்கு எதிர்மாறான கொள்கைகளையே அரசு கொண்டுள்ளதுடன், அதற்கு எதிர்மாறாக தற்பொழுது நடந்துகொண்டு வருகின்றது. அதன் முதல் கட்டம் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

துறந்து அரசாங்கத்துடன் இணைந்து இருப்பது.

மூன்றாவது- ஜே.வி.பி யினருக்கு ஆதரவான அரசாங்க அமைச்சர்களுடன் இணைந்து சனாதிபதியின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவது.

நான்காவதாக- இவைகள் எல்லாம் நிறைவேறிய பின் அரசாங்கத்தில் இருந்துவிலத்திச் செல்வது.

இவைகளை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டு ஜே.வி.பி அரசாங்கத்தில் இருந்து விலகாது என இம்மாதம் பதினைந்தாம் திகதி நடந்த ஜே.வி.பி கூட்டம் ஒன்றில் அதன் தலைவர் சோமவன்சஅமரசிங்க தெரிவித்துள்ளார். அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசுக்கு எதிராக செயல்படுவதே அவர்களின் புதிய திட்டங்களாகும். இவற்றைச் செயற்படுத்த வேண்டுமானால் விமல்வீரவன்சவும், அமைச்சர் லால்காந்தாவும் காதுகிழிய பொது மேடைகளில் முழக்கமிட வேண்டும். அரசாங்கத்தின் பங்காளிகள் என்பதைத் தங்களின் செயல்களினால் நிரூபித்துக்காட்ட வேண்டும். மக்கள் சனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவைக்கவேண்டும். மக்களைத் தம் வசப்படுத்தி சிறிலங்கா சுதந்திரக்கட்சியை எதிர்வரும் தேர்தல்களில் மூன்றாம் இடத்திற்குத் தள்ளவேண்டும். இதைச் செய்வதற்கு இவர்களுக்குப்பலம் இல்லாவிட்டால் அரசாங்கத்தில் மேலும் நீடித்திருப்பதில் எந்தப்பலனும் கிடையாது.

இதற்கு முன்னதாக ஜே.வி.பி அமைச்சு பொறுப்புக்களில் இருந்து விலகி சாதாரண அங்கத்தவர்களாக இருப்போம் என


சாத்தியக் கூறுகள் அதிகமாக தென்படுகிறது. 1956 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திர கட்சி பௌத்த பேரினவாதத்தை வளர்த்து, அதற்குப் பிறகு ஜே.வி.பி. சிறிலங்கா சுதந்திர கட்சியில் இருந்து கொண்டே பௌத்த பேரினவாதத்தை நாட்டில் பரப்பிவருகிறது. ஜே.வி.பி யின் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் சிலர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினுள் இருக்கின்றனர். ஆனால் சந்திரிகா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை வகிக்கும் வரை ஜே.வி.பியினரால் சுதந்திரக் கட்சியை தனது வலைக்குள் சிக்கவைக்க முடியாது. தற்பொழுது சுதந்திர கட்சிக்குள் சந்திரிகாவுக்கு எதிராக மங்கள சமரவீரவையும் கதிர்காமரையும் தூண்டி விட்டு கதிர்காமரும், சமரவீரவும் சிறிலங்கா சுதந்திர கட்சியின் வருங்காலத் தலைவர்கள் என ஜே.வி.பி. புகழ்மாலை சூட்டினால் மகிந்த ராஜபக்ஷவையும் மங்கள சமரவீரவின் குழுவில் இணைத்துக் கொள்ளலாம்.

இவர்கள் கட்சியை விட்டு விலகுவதற்கு முன்னதாக தங்களை பலப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் ஐக்கிய தேசியக்



# சுதந்திரக் கட்சியை மூன்றாம் இடத்திற்கு தள்ளுவதே ஜே.வி.பி யின் அரசியல் இலக்கு

வேலைத்திட்டங்களில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள். அரசாங்கம் சுனாமிப் பேரலை நிர்மாண வேலைகளை அமைச்சர்கள் குழுவின் தீர்மானங்களின்படி எடுப்பதில்லை. மனோதித்தவெல்ல போன்றவர்களின் ஆலோசனைப்படியே எடுக்கிறது. அதனால் சுனாமிப்பேரலை நிவாரண வேலைகள் பெரும் குழறுபடியில் உள்ளது. இதனால் அரசாங்கத்திற்கு ஏற்படும் அபகீர்த்திகளை ஜே.வி.பியினருக்கு தற்பொழுது விமர்சனம் செய்ய முடியாது ஏனெனில் அவர்களும் அரச இயந்திரத்தின் ஒரு அங்கமாகும்.



மூன்றாவது, சுனாமி பேரலைகளினால் ஏற்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகள் தற்பொழுது கூட்டு அரசு சனாதிபதியின் தீர்மானங்களில் இறுகிப் போய் உள்ளது. நோர்வேயின் தீர்மானங்கள் யாவும் அரசாங்கத்தின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டதாகும். சனாதிபதி அவர்கள் நோர்வேயின் திட்டங்களை ஏற்றுக்கொள்வார். அப்பொழுது விடுதலைப்புலிகளின் அரசியல் நோக்கங்களையும் அரசு அங்கீகரித்ததற்கு சமமானதாகும்.

நான்காவது, சர்வதேச நாடுகள்

இது சம்பந்தமாக ஜே.வி.பி தற்பொழுது மௌனம் சாதிக்கின்றது. ஜே.வி.பி யின் மறைமுக ஆதரவும் இதற்கு உண்டு. அமைச்சர்கள் அரசாங்கச் சொத்துக்களை- உத்தியோக இருப்பிடங்களை போக்குவரத்துக்கான உத்தியோகபூர்வ வாகனங்களை சொந்த நலன்களுக்காக பாவிப்பது நடைபெற்ற வண்ணமுள்ளது. பொலிஸ், பயிற்சிக்கல்லூரி மற்றும் தேசிய வைத்தியசாலைகளில் அமைச்சர்களின் தலையீடுகள் குறைந்த பாடில்லை. இவைகளை எல்லாம் ஜே.வி.பி யினர் கண்காணித்து அரசாங்கத்தில் இருந்து விலகப் போவதில்லை என முடிவு எடுத்துள்ளது. அதனால் அரசுசெய்யும் தவறுகளை ஜே.வி.பி சுட்டிக்காட்டுவது மிகவும் குறைந்துள்ளது. பல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அரசுக்கு எதிராக ஆரம்பித்து அரசாங்கத்தில் அங்கம் வகித்துக்கொண்டு அரசை மிரட்டும் படலத்தை ஆரம்பித்தது. பல்கலைக்கழகங்களில் மாணவர்களை தங்களுக்கு பக்கசார்பாக்கி அதன் மூலம் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வது, இவைகளையே இப்பொழுது ஜே.வி.பி அரச எதிர்ப்பு ஆயுதமாக பாவிக்கின்றது. தற்பொழுது ஜே.வி.பியின் புதிய திட்டங்கள்.


முதலாவது- அரசுடன் நீடித்து இருப்பது இரண்டாவது-அமைச்சர் பதவிகளைத்

பகிரங்கமாகக் கூறினார்கள். ஆனால் பாராளுமன்றத்தில் சுனாமி விவாதத்தின் போது இவர்கள் எதுவும் கதைக்காமல் அமைதியாக இருந்தபடியால் இவர்கள் அமைச்சுப்பதவிவிலகல் நாடகத்தை அரங்கேற்ற முடியாமல் இருக்கின்றனர். ஆயிரம் குளங்கள் கட்டுவது, விவசாய கிராமங்களை ஏற்படுத்துதல், மீனவக்கிராமங்கள் அமைப்பது இவைகளை நடைமுறைப்படுத்தியே மக்கள் முன் இவர்களால் செல்ல முடியும். கலாச்சார அமைச்சு இவர்கள் இடத்தில் உள்ளபடியால் சிங்கள பௌத்த இனவாதமும் இவர்களுக்கு ஒரு உந்து கோலாக அமைந்துள்ளது இதனைப்பயன்படுத்தி இனவாதத்தைப் பரப்பமுடியும். இவைகளை பரப்புவதில் ஊடகத்துறையும் முன்னணி வகிக்கின்றது. ஆனபடியால் ஜே.வி.பியினர் தமது அமைச்சுப் பதவிகளில் இருந்து விலக மாட்டார்கள். விலகினால் இவர்களுக்கு எதிர்காலம் கிடையாது என்பதையும் இவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே கொழும்பில் இருந்து கொண்டு "ஈ" காதைகடிக்கிற கதையாக சந்திரிகா அம்மையாருக்கு நிலமை ஏற்பட்டுள்ளது.

ஜே.வி.பி -சிறிலங்கா சுதந்திர கட்சி கூட்டு

லங்காதீப சிங்கள நாளிதழ்
சுனந்த தேசபிரிய
மொழியாக்கம் அ.சக்திவேல்

ஒப்பந்தம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே மங்கள சமரவீரவும் கதிர்காமரும் ஜே.வி.பியோடு மிகநெருக்கமாகவே செயற்பட்டு வந்தனர். ஜே.வி.பி அரசை விட்டு விலகிச்சென்றாலும் அவர்களுடன் இந்த இருவரும் வெளியேறலாம். இப்பொழுது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை போராட்டத்தினால் வெகு இலகுவாக சிறிலங்கா சுதந்திர கட்சியினரை ஜே.வி.பி. தம் வசம் இழுத்துக் கொள்ளும்



கட்சியோடு போட்டியிட முடியும். ஆனால் ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டு வெளியேறும் பொழுது அரசாங்கத்தை அன்றே சந்திரிகா கலைக்க நேரிடும் அப்படி இல்லாவிட்டால் எதிர்க்கட்சியோடு இணைந்தே சனாதிபதி செயலாற்ற வேண்டும். தனித்து தேர்தல்க ளில் போட்டியிட்டால் நிச்சயமாக ஐக்கிய தேசியக் கட்சி வெல்லும். இதைத் தடுக்க முடியாது. ஆனபடியால் ஜே.வி.பி. அர சாங்கத்தில் இருந்து பிரிந்து செல்லாது, வடக்கு கிழக்கு அதிகாரப் பரவலாக்க லுக்கும் சுனாமி நிவாரண வழங்கலிலும் வடக்கு கிழக்கில் புலிகளுடன் இணைந்து செயற்படுவதற்கும் ஜே.வி.பி முற்றாக எதிர்க்கும். ஆனபடியால் அரசாங்கத்தில் இருந்து பிரிந்து சென்று ஜே.வி.பி இதை எதிர்த்து வெற்றி பெறுமா? என்பது கேள்வியாக வுள்ளது. இல்லையேல் ஜே.வி.பி.யை கட்சிக்குள் வைத்துக் கொண்டு அதிகாரப் பரவலாக்கலை புலிகளுக்கு கொடுக்க முடியுமா? அப்படி இல்லாவிட்டால் மீண்டும் யுத்தம் செய்து வெற்றி கொள்ளப் பார்க்கின்றார்களா? இவற்றையெல்லாம் பொறுத் திருந்து தான் பார்க்க வேண்டும்.

# சனாதிபதி தேர்தலைக் குறிவைத்து ஆளும் கட்சியை விமர்சிக்கும் ஐ.தே.க

சனாதிபதித் தேர்தலை உரிய காலத்திலே நடத்த வேண்டுமென ஆளும் அரச தலைமைத்துவத்துக்கு இந்தியாவினூடாக அழுத்தங்களைக் கொடுப்பதற்கான முயற்சிகளை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன. தற்போதைய சனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலம் இவ்வருடத்துடன் முடிவடைகின்றது. இதனையடுத்து புதிய சனாதிபதிக்கான தேர்தலை நடத்த அவர் ஆயத்தங்களைச் செய்யவேண்டும். அது தொடர்பான கருத்துக்களையே அவர் அரசியல் அரங்கில் வெளிப்படுத்தி வந்திருக்கவேண்டும். ஆனால் இதற்குமாறாக சந்திரிகா தொடர்ந்தும் பதவியிலே நீடிக்க ஆசைப்படுகிறார். இதற்காக அரசியல் யாப்பை மாற்றியமைக்கப் போவதாகவும் பிரதமர் அதிகாரங்களை கொண்ட அரசியல் யாப்பை உருவாக்கப்போவதாகவும் அறிவிப்புக்களை விடுத்து வந்துள்ளார்.


ரணில்

இறுதியாக சனாதிபதி பதவியை இரத்துச் செய்து தானே தொடர்ந்தும் பதவியில் இருக்க வேண்டுமென்றும் அதேவேளை அதிகாரப் பரவலாக்கல் குறித்து மக்களின் கருத்தை அறியும் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடத்தவும் திட்டமிட்டுள்ளதாக அறியமுடிகிறது.

இந்த யோசனைக்கு அரசாங்கத்துக்குள்ளேயும் பல்வேறு கருத்துக்கள், வாதப்பிரதிவாதங்கள் நிலவி வரும் அதேவேளை பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. தனது கடுமையான எதிர்ப்பைத்தெரிவித்துள்ளது. சந்திரிகா தரப்பினரது இவ்வறிவிப்பானது சனநாயகத்திற்கு விரோதமானது எனவும் கண்டித்துள்ளது. அத்துடன் நாட்டில் தீர்க்கப்படவேண்டிய பல பிரச்சினைகள் இதுவரை தீர்க்கப்படாமல் இருக்கின்ற போது ஒரு கருத்துக்கணிப்பும் அதனால் ஏற்படும் சுமார் 100 கோடி ரூபாய் வரையான பணமும் வீண் விரயம் செய்யப்படுவதுடன் இது அவசியமற்றது எனவும் கூறியுள்ளது. கடந்த வருடம் இலங்கையின் வடகிழக்கு உள்ளிட்ட கரையோரங்களைத்தாக்கிய சுனாமி கடல் அனர்த்த விளைவுகளில் இருந்து மக்கள் இன்னும் தமது இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பாத நிலையில் மீள் கட்டுமானப் பணிகள் சரிவரத் தொடங்கப்படாத நிலையில் ஓர் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை நடத்த முடியுமா? என்பதே இன்றைய கேள்வியாகவுள்ளது. அத்துடன் விடுதலைப் புலிகளுடன் இணைந்து மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக் கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படாத நிலையில் வாக்கெடுப்பு என்பது தேவையற்ற ஒன்றாகவே பலராலும் பார்க்கப்படுகிறது. சனாதிபதி சந்திரிகா தமது பதினொரு வருட காலம் நிறைவேற்று அதிகார ஆட்சியை வைத்திருந்த போது சனாதிபதி ஆட்சி முறையை மாற்றுவதற்கு முயற்சிக்காமல் தனது ஆட்சி முடிவுறும் தறுவாயில் நிறைவேற்று அதிகாரத்தை மாற்றியமைக்க முயல்வதானது தனக்குப் பின்னர் ரணிலோ அல்லது மகிந்தராஜபக்ஷ போன்ற தனது கட்சி உறுப்பினர்களோ சனாதிபதி ஆட்சியை நடத்த விடக்கூடாது என்ற காழ்ப்புணர்ச்சியும், தாமே தொடர்ந்தும் பதவியிலே அமர்ந்திருக்க வேண்டுமென்ற பேராசையுமே தவிர வேறொன்றுமில்லை.

இது ஒரு புறமிருக்க இன்று ஐக்கிய தேசியக் கட்சியினுள்ளே ஒரு கருத்தொற்றுமை நிலவுவதும், வரவிருக்கும் சனாதிபதித் தேர்தல் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் முன்மொழியப்பட்டிருப்பதும், ஆளும் கூட்டணி அரசின் பக்கம் ஒருவித கருத்தொற்றுமை இல்லாத நிலைமை அதாவது சந்திரிகா ஒன்று சொல்ல ஜே.வி.பி ஒன்று சொல்லுவதுமான அரசியல் வாதப்பிரதிவாதமும், ஐ.தே.க. தொடர்பாக மக்கள் மத்தியிலே ஒரு நல்லபிப்பிராயத்தையே தோற்றுவித்து வருவதாகத் தெரிகிறது. இந்தச் சூழ்நிலையை ஐக்கிய தேசியக் கட்சியே ஏற்படுத்திவருகிறது. அதாவது சில முன்மாதிரியான செயற்பாட்டு அறிக்கைகளை விட்டு ஐக்கிய தேசியக்கட்சி தனது சனாதிபதித் தேர்தலை நோக்கி காய்களை நகர்த்திவருகிறது என்றே சொல்லலாம். குறிப்பாக இடைக் கால நிர்வாகசபை அடிப்படையிலே புலிகளுடன் பேசி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐ.தே.க.ஆதரவு வழங்குமெனவும், சமாதானப் பேச்சுக்களுக்குத்தடையாக இருக்கும் ஜே.வி.பியை உதறித்தள்ளி விட்டுப் பேச்சுக்களைத் தொடர அரசு முன்வந்தால் அரசுக்கு ஆதரவு வழங்கி அரசைத் தக்கவைக்க ஐ.தே.க.தயாராய் உள்ளது என்ற அறிவிப்பும் இதனைத் தொடர்ந்து வந்த சுனாமி நிவாரண நடவடிக்கைகளை ஜே.வி.பி.தற்போது வாயை மூடிக்கொண்டு என்ன பார்த்துக்கொண்டிருக்கிறது எனவும் ஐ.தே.க.குற்றங்களைச் சுமத்துகிறது. பெரும் அதல பாதாளத்திற்கு சென்று கொண்டிருந்த இலங்கையின் பொருளாதார நிலைமை சென்ற வருட இறுதியிலே ஏற்பட்ட சுனாமிப்பேரழிவுகளின் பின்னர் உலக நாடுகளில் கிடைக்கப்பெற்ற பெருமளவிலான பொருளாதார மற்றும் பண உதவியால் தப்பிப்பிழைந்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை அரசு சரியான முறையிலே பயன்படுத்த வேண்டும். இதற்கு தற்போது இணக்கம் காணப்பட்டுள்ள பொதுக் கட்டமைப்பு செயல் திட்டத்தைச் சரியான முறையிலே அரசு பயன்படுத்த முன்வரவேண்டும். இதன் மூலம் தினமும் அவல வாழ்வை சந்தித்து வரும் கடற்கோளால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவர முடியும்.


மன்மோகன்சிங்

ஆளும் கட்சிக்குள்ளே தற்போது இருந்து வருகின்ற உள் முரண்பாட்டை நீக்க முன்வரவேண்டுமென கட்சித்தலைவர் ரணில் அவர்கள் கோரிக்கை விட்டிருந்தார். ஏனெனில் சனாதிபதி ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்தால் ஜே.வி.பி அதனை அடியோடு எதிர்க்கும். கூட்டணிக்குள் உருவான இப்படிப்பட்ட குளறுபடிகளின் மூலம் எந்தவித ஆக்கபூர்வமான செயற்பாட்டையும், செய்ய முடியாது என்பதையே ரணில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். இன்று ஆளும் மேற்கொள்ள அனைத்துக் கட்சிகளையும், புலிகளையும் உள்ளடக்கிய நிர்வாகக்கட்டமைப்பை மேற்கொள்ள முன் வந்தமையும் ரணிலின் தேர்தலை நோக்கிய காய் நகர்த்தல்களாகப் பார்க்க முடியும். இவை எவற்றுக்கும் சந்திரிகாவின் கூட்டணி அரசு சம்மதம் தெரிவிக்காத நிலையிலே அரசு மீதான குறைகளை வெளிக் கொண்டுவர ஐ.தே.க.தீர்மானித்துள்ளது.

அதாவது அரசு ஆட்சிக்கு வந்து ஒரு வருடமாகியும் தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றாததையும், தற்போது அதிகரித்துக்கொண்டிருக்கும் வாழ்க்கைச் செலவின் உயர்வையும் கண்டித்து வருகின்றது. உண்மையிலேயே தற்போது பங்குச்சந்தையின் வீழ்ச்சி.

* அதிகரித்துள்ள பணவீக்கம்
* கோதுமை மா (பாண்) வின்விலை யேற்றம்
* நீர்,மின்விநியோகங்களுக்கான கட்டண உயர்வு

என்பவற்றால் வாழ்க்கைச்செலவு அதிகரித்துள்ளதை எவரும் மறுக்க முடியாதது உண்மைதான். ஏனெனில் கடந்த 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் நாட்டின் பணவீக்கம் 0.9 சதவீதமாக இருந்ததெனவும் தற்போது அது 2005 பெப்ரவரியில் 18 சதவீதமாக அதிகரித்த நிலைமையைப் பார்க்கும்போது அதிகரித்துச் செல்லும் வேகம் மிகக் கூடுதலாகவேயுள்ளது. இந்த நிலைமைகளின் படி பார்த்தால் வாழ்க்கைச் செலவு உயர்வுக்குக் காரணமான பொருட்களின் விலை உயர்வு இன்னும் அதிகரித்துக்கொண்டு செல்வதற்கு வாய்ப்புள்ளதாக முன்னாள் பிரதிநிதியமைச்சர் பந்துல குணர்வர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதாகவும் நாட்டிலே காணப்படும் வேலை யில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தாம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களில் இதனை நிறைவேற்றுவோம் . எனவும் கூறிய ஆளும் கட்சியினர் ஒருவருடம் ஆன போதும் இதில் எதையும் நிறைவேற்றவில்லை.


சந்திரிகா

சந்திரிகா ஜே.வி.பி கூட்டணியில் இருந்து அடுத்த சனாதிபதிக்கான வேட்பாளர் ஒருவரை நியமிப்பதில் பெரும் இழுபறியும், கருத்துமோதல்களும் உருவாகியுள்ளது. பிரதமர் மகிந்தராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் ஒரு பக்கமும் அநுரா பண்டார நாயக்கவுக்கான ஆதரவாளர்களில் ஒரு பகுதியினருமாக உட்கட்சிப் போட்டிகளிலே இருந்து வரும் நிலைப்பாடும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு குறிப்பாக ரணிலின் சனாதிபதி இலக்கிற்குச் சாதகமாகவே இருக்கின்றது. இருந்தபோதிலும் சனாதிபதிக்கான தேர்தல் ஒன்றை எதிர்பார்த்து நகர்வுகளை மேற்கொண்டு வரும் ஐ.தே.க. சனாதிபதி பதவியைக் கைப்பற்றுவதன் மூலம் ஆட்சிக்கலைப்பை மேற்கொண்டு ஒரு புதிய பொதுத்தேர்தலை சந்தித்து அரசாங்கத்தைத் தனதாக்கிக்கொள்ளும் நோக்கம் கொண்டதாகவே இருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்திலே சனாதிபதி சந்திரிகா தரப்பு முன்வைக்கும் கருத்துக்கணிப்பும் அதிகார மாற்றமும் ஐ.தே.க வுக்கு அடிமனதில் இடிவிழுவதாகவே இருக்கும். இதற்காகவே ஐ.தே.க தனது எதிர்ப்பு நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளது. இதற்காக கட்சியின் உயர்பீடம் கூடி சில முடிவுகளை எடுத்துள்ளது. அதில் ஒன்றாக சுனாமி நிவாரண உதவியாக உலக நாடுகளும், சர்வதேச அமைப்புக்களும் வழங்கியுள்ள நிதியுதவிகளின் உண்மையான விபரங்களைத் திரட்டுவதற்கு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் அரசின் வீண் விரயங்களை அம்பலத்துக்குக் கொண்டு வருவதும் உதவிகள் யாவும் மக்களைச் சென்றடைந்துள்ளதா? என்பதைக் கண்டறிந்து தமது பிரச்சாரப் பணிகளை முடக்கி விடவும், தீர்மானித்துள்ளது. இதற்காக நாடளாவிய ரீதியில் சகல கிராமமட்டங்களிலிருந்து எதிர்ப்புப் பேரணிகளை நடத்தவும் பிரச்சாரங்களை மேற்கொள்ளவும் முடிவு

**ஸ்ரீபன்**

செய்திருக்கின்றது. அத்துடன் வரவிருக்கும் தமிழ்,சிங்களப் புத்தாண்டை அடுத்து அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை பாராளுமன்றிலே கொண்டு வரவும் உத்தேசித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை புலிகளுடன் இறுதித்தீர்வு பற்றிப் பேச தமது அரசு தயாராய் இருக்கிறது என சந்திரிகா கூறியுள்ளதற்கு எதிர்க்கட்சித் தலைவர் இறுதித்தீர்வு என்ன? என்பது பற்றிய முழுவிபரத்தையும் வெளியிட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார். எனவே ஐ.தே.க.வின் அரசியல் நகர்வுகள் ஒரு சனாதிபதித் தேர்தலை முன்னோக்கியதான ஒழுங்குபடுத்தல்களாக இருந்து வருவது நோக்கத்தக்கது.

# பொத்துவில் - உல்ல முஸ்லிம் கிராமமா? பாரம்பரிய சிங்கள- பௌத்த கிராமமா?

## ஹக்கீமும், தம்மானந்த தேரரும் வாக்குவாதம்

(கொழும்பு)

**பொத்துவில் பிரதேசத்திலுள்ள உல்ல என்ற முஸ்லிம் கிராமத்தில் விகாரை ஒன்று அமைக்கப்படுவதாக அண்மையில் பாராளுமன்றத்தில் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தியதற்கு பௌத்த சமய பாதுகாப்புச் சபையின் செயலாளரான மெதகம தம்மானந்த தேரர் மறுப்புத்தெரிவித்துள்ளார்.**

இந்தக் குற்றச்சாட்டிக்கு பதிலளித்துள்ள அவர் மேற்படி புத்தர் சிலை சுனாமி அனர்த் தத்தினால் இடம்பெயர முன்பு அங்கு இருந்ததாகவும், சுனாமியால் இது அழிவுற வில்லை என்றும், இந்தச் சிலையை பாதுகாக்கும் பொருட்டே அதற்கு அறை யொன்று கட்டப் படுவதாகவும், கூறியுள்ளார். அத்துடன் ஹக்கீமின் கூற்றின்படி சனாதிபதியின் பணிப்பின் பேரில் சோதனைகள் நடத்தப்பட்டு நிரூபிக்கப் பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இக்கிராமத்தில் 82 பௌத்த குடும்பங்களும் 15 முஸ்லிம் குடும்பங்களும் வசிப்பதாகவும், அது பாராம்பரிய சிங்கள பௌத்த கிராமம் என்றும் கூறியுள்ள அவர் ஹக்கீம் தெரிவித்த கூற்றின்படி அவர் மதக் கலவரத்தைத் தூண்டும் விதமாக நடந்து கொண்டிருப்பதாகத் தேரர் குற்றம் சாட்டினார்.

# குல சிறி உடுகம்பொல மீது குற்றப் பத்திரிகை தாக்கல்

(கண்டி)

கண்டி மாவட்ட முன்னாள் சிரேஷ்டபொலிஸ் அத்தியட் சகர் குலசிறி உடுகம்பொலவுக்கு எதிராக நேற்று முன்தினம் கண்டி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது

மில்லேனியம் சிற்றியில் அமைந்திருந்த ரகசிய இராணுவ முகாமில் கடமையாற்றிக் கொண் டிருந்த இராணுவத்தினருக்கு எதிராக செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டு இவர்மீது சுமத்தப் பட்டிருந் தது.

இதன் அடிப்படையில் ஏற் கனவே கொழும்பு குற்றத்தடுப்பு பொலிசாரால்கைது செய்யப்பட்ட அவர் பிணையில் செல்ல அனும திக்கப்பட்டார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அவர் மீண்டும் நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது அவரை நீதிமன்றம் பத்தாயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும், செல்ல அனு மதித்தது.

அதேநேரம் இந்த வழக்கு விசாரணையை நீதவான் எதிர்வரும் ஜூன் மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (32)

# வேடுவ இனத்தவரை தாக்கிய பொலிஸ் அதிகாரி மீது விசாரணை

வேடுவர் ஒருவரை மஹியங்கன பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி தாக்கியது தொடர்பான வழக்கு விசாரணை ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இது பற்றிமேலும் தெரிய வருவ தாவது; தம்பான பகுதியைச் சேர்ந்த ஊரிவரிகுக்குளா என்ற வேடுவர் தனக்கு ஏற்பட்டிருந்த பிரச்சினை சம்பந்தமாக முறையிடுவதற்கு மஹியங்கன பொலிஸ்நிலையத் திற்குச் சென்று வேடுவமொழியில் பொலிஸ்நிலையப் பொறுப்பதி காரிக்கு முறைப்பாடு செய்த பொழுது தனக்கு வேடுவமொழி தெரியாது என்று கூறி இக் களத்தில் வாக்குமூலம் கொடுக் குமாறு அவரை அடித்து துன்புறுத் தியதற்குஎதிராகஉயர்நீதி மன்றத் தில் வழக்கு தாக்கல் செய்து திருந் தார். இவ்வழக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி விசாரணை செய் வதற்காக உயர்நீதி மன்ற நீதிபதி காமினி அமரதுங்க மஹியங் கனைக்கு வரவுள்ளார்.

இலங்கை நீதிமன்ற சங்கத் தினரால் இந்த வேடுவருக்காக வாதாடுவதற்கு மூன்று சட்டத் தரணி கள் ஆஜராக உள்ளனர்.

# சனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியளிக்க சந்தர்ப்பம் வேண்டும்

## - கண்காணிப்புக்குழு மனு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு சனாதிபதியால் நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சிய மளிக்க சந்தர்ப்பம் வழங்குமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு விண்ணப்பித்துள்ளது. என்று அதன் தலைவர் ஹொக்லண்ட் தெரிவித் தார்.

அம்பாறை,மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களிலும் நடைபெறும் ஆணைக்குழு அமர்வுகளில் நாம் சாட்சியமளிக்க வுள்ளோம். எனவும் அவர் தெரிவித்தார். சுட்டுக்கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் கொலைக்கே ஆணைக்குழு முக்கியத்துவம் வழங்குவதாகத் தெரிகின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

# போலி நாணயத்தாளை அச்சிட்ட நிலையம் கண்டியில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கண்டி நகரில் போலி உள் நாட்டு, வெளிநாட்டு நாணயத் தாள்களை தயாரித்து வந்த நிலையம் ஒன்றை கண்டிப் பொலி சார்கண்டு பிடித்துள்ளனர்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் இயங்கும் விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிசார் சுற்றி வளைத்து பல இலட்சக்கணக்கான போலி நோட் டுக்களைக் கடந்த திங்கட்கிழமை கைப்பற்றியதுடன் ஐந்து, சந்தேக நபர்களையும் கைது செய்துள் ளனர்.

இங்கு போலி நோட்டுக்களை தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட நவீன கணினி இயந்திரங்க ளையும் கைப்பற்றிய பொலிசார் சுமார் மூன்று லட்சம் ரூபா பெறும தியான அமெரிக்க டொலர் நோட் டுக்களையும், மேலும் மூன்று இலட்சம ரூபா பெறுமதியான ஆயிரம் ரூபா போலித் தாள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந் தேக நபர்கள் ஐவரில் ஏற்கனவே பத்து இலட்சம் போலி அமெரிக்க டொலர்நோட்டுக்களைத் தயா ரித்து நீதிமன்றத்தால் பிணையில் விடப்பட்ட பாடசாலை மாணவன் ஒரு வரும் அடங்கியுள்ளதாகப் பொலி சார் தெரிவித்தனர்.

# பொலிசார் – மக்களுக்கிடையில் முறுகல் தெனியாயவில் தொடரும் பதற்றம்

(கொழும்பு)

தெனியாய பேவர்லி தோட்டத்தில் பொலிசாருக்கும், பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து அப்பகுதியில் இன்னும் பதற்றம் நிலவி வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் இரண்டு பொலிசார் காயமடைந்து தெனியாய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். இதனால் தொடர்ந்து அப்பகுதி மக்கள் இரவு வேளைகளில் அச்சுறுத் தலுக்கு உள்ளாவதனால் தமது அன்றாட தேவைகளுக்காக தெனியாய நகரத்திற்கு வருவதற்கு அஞ்சுகின்றனர். பேவர்லி தமிழ் வித்தியாலயத்தில். ஆசிரியர்க ளினதும், மாணவர்களினதும் வருகை இச்சம்பவத்தையடுத்து மந்த நிலையிலேயே இருப்பதுடன், தோட்டத்தொழிலாளர்களும் முழு மையாக வேலைகதுச் செல்லவில்லை. இதேவேளை திங்கட்கிழமை இரவு தொழிலாளர்கள் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளனர். சட்டவிரோதமாக மதுபானம் காய்ச்சியவரைக் கைது செய்யும் முகமாக விசாரணைக்கு வந்த இரு பொலிசார் மீதே கற்கள் எறியப்பட்டுள்ளன. இச் சம்பவத் தைக் காரணமாக வைத்து அப்பகுதி மக்கள் தோட்டத் தொழி லாளர்கள் மீது இனக்கலவரத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டு வருவதாக வும் தெனியாய பொலிசார் தெரி விக்கின்றனர். இது தொடர்பான பக்கசார்பற்ற விசாரணையை நடத்துமுகமாக பேவர்லி தோட்டத்து மக்கள் மாத்தறை மாவட்ட பொலிஸ் அத்தியட் சகருக்கு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

# வங்கிகளை தனியார் மயப்படுத்தும் அரசின் முயற்சியை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரச வங்கிகளை தனியார் மயப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுவரும் முயற்சிகளை எதிர்த்து வங்கி ஊழியர்கள் நேற்று முன்தினம் எதிர்ப்பு ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்

நண்பகல் 12 மணியளவில் கொழும்பு மக்கள் வங்கித் தலை மையகத்துக்கு முன்பாக நூற்றுக் கணக்கான ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஊழியர்கள் ''அரச வங்கிகளை விற்காதே'' "வங்கிகளை விற்பனை செய்யும் சட்ட மூலங்களை ரத்துச் செய்" போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்திய வண்ணம், கோசங்களை எழுப் பியவாறு தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர். எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தி ருந்த அகில இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.எம்.ஜயசேகர கருத்துத்தெரிவிக்கையில்,

அரசாங்கம் படிப்படியாக அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதற்கான முயற்சி களை மேற்கொண்டு வருகின்றது. இதனை எதிர்த்து நாட் டில் வேலை நிறுத்த அலையடிக்க ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் அரசாங்கம் அரசவங்கிகளையும் விட்டு வைப்ப தாகத் தெரியவில்லை. ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வ தேச நாணய நிதியம் ஆகிய வற்றின் ஆலோசனைகளுக்கமைய மக்கள் வங்கியை தனியார் மயப்படுத்தும் முயற்சியை அர சாங்கம் மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஏனைய நிறுவனங்களில் கைவைப்பது போன்றுவங்கிகளை தனியார் மயப்படுத்த அரசாங்கம் முயற்சித்தால் விளைவுகள் பாரதுாரமானதாக இருக்கும் என்பதனைத் தெரிவித் துக்கொள்கிறோம். 1999 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மக்கள் வங்கிக்குச் சேர்ததுக்கொளளப்பட்ட 2000 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் இது வரை ஓய்வூ தியத்திட்டத்திற்கு உட்படுத்தப்படவில்லை. இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் கவனக்குறைவாக செயற்பட்டால் பாரிய தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடும் என்று எச்சரிக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

# புத்தளம் - முந்தல் பகுதியில் விபத்தில் ஒருவர் பலி

(கொழும்பு)

புத்தளம் - முந்தல் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். சிலருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவமானது பந்துலு ஓயா பாலத்திற்கருகில் வான் ஒன்றுடன் பேருந்து ஒன்று மோதியதன் காரணமாக இடம்பெற்றுள்ளது. இதன் போது வானில் பயணம் செய்த ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக பேருந்து சாரதியைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.


இரண்டாம் ஆண்டு நினைவு

பிறப்பு 19 05 1944



இறப்பு 31 03 2003

அமரர்

அந்தோனிப்பிள்ளை செலஸ்ரீன்

ஈராண்டு ஆன போதும்
ஆறவில்லை எம் இதயம்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்றழைக்க நீங்களில்லை
பாரினிலே உங்கள் முகத்தை
பார்த்திருக்க முடியவில்லை
அழுது புலம்புகின்றோம்-இறைவனை
அனுதினமும் வேண்டுகின்றோம்.

இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

(சி.11476)

என்றும் மறவா நினைவுடன் குடும்பத்தினர்

# பாக்.அதிபர் முஷாரப்புடன் சகல விடயங்கள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தத் தயார்!

## -இந்தியப் பிரதமர் அறிவிப்பு

(புதுடில்லி)

**புதுடில்லி வரவிருக்கும் பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஸ் முஷாரப்புடன் சகல விடயங்கள் பற்றியும் பேச்சு நடத்தத் தயார் என்று இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.**



வருகிற ஏப்ரல் 16ஆம் திகதி டில்லியில் இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியைக் காண பாகிஸ்தான் அதிபர் முஷாரப் டில்லி வருகிறார். இந்தவருகையின் போது காஷ்மீர் பிரச்சினை பற்றி பிரதமர் மன்மோகன் சிங்கிடம் பேச்சு நடத்துவேன் என்று முஷாரப் ஏற்கனவே கூறியிருக்கிறார்.

இந்நிலையில் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் ஷாஜாத் உசேன் தலைமையிலான அரசியல் தலைவர் குழுவினர் நேற்று டில்லி வந்து பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்தனர். அப்போது அவர் கூறியதாவது;

இந்தியா-பாகிஸ்தான் இடையே நடந்துவரும் சுமுக பேச்சுவார்த்தையை பாகிஸ்தான் மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர். கிரிக்கெட் போட்டிகளால் இருநாட்டு மக்களிடையே நல்ல உறவு ஏற்படுகிறது. நிர்வாகத்தில் இருப்பவர்கள் தைரியமான முடிவுகளை எடுக்கவேண்டும் என்று பாகிஸ்தான் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். தற்போது ஏற்பட்டுள்ள நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ள இரு நாட்டினரும் முன்வர வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

பின்னர் மன்மோகன்சிங் பதிலளித்துப் பேசியதாவது;

டில்லி வரும் முஷாரப்புடன் காஷ்மீர் பிரச்சினை மட்டுமல்ல அனைதது்பிரச் சினை கள்ள பற்றி யும்பேசத் தயா ராக இருக்கி றேன்.

நாங்கள் எல்லைகளை மாற்றமாட்டோம் வளர்ந்து வரும் உலகில் எல்லைகள் ஒரு பொருள் அல்ல. கடந்த ஆண்டு நியூயோர்க் நகரில் காஷ்மீர் பிரச்சினை பற்றி பேசினோம். அந்தப் பேச்சின் தொடர்ச்சியாகத் தற்போது பேசத்தயாராக இருக்கிறேன். எல்லாப் பிரச்சினைகளுக்கும் கடைசியாக நல்ல தீர்வு காண முயற்சி எடுத்து வரு கிறோம் காஷ மீர் பிரச்சினையை நாங்கள் ஒதுக்கி வைக்கவில்லை. எங்களுடைய எதிரி வறுமைதான். நாட்டிலுள்ள வறுமை, கல்விஇன்மை, நோய்கள் ஆகியவற்றை ஒழிக்க நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.

இரு நாடுகளிடையே நல்ல ஒத்துழைப்பு நீடிப்பதற்கு சிந்து நதி ஒப்பந்தமே சிறந்த முன் உதாரணம். இந்த ஒப்பந்தத்தின்படி இருநாட்டு தொழில் நுட்ப வல்லுநர்களும் நீர் பங்கீடு, புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றி மேலும் ஆராயவேண்டும். இவ்வாறு மன்மோகன்சிங் கூறினார்..



புதுடில்லிக்கு வருகைதந்திருந்த பாகிஸ்தான் முஸ்லிம் லீக்தலைவர் சவுத்ரி சீகத் உசேனை சனாதிபதி அப்துல்கலாம் வரவேற்கிறார் அருகில் இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் அஜிஸ் அகமதுகான்.

# மகாத்மா காந்தி விரும்பிய மதசார்பற்ற சமத்துவமுள்ள நாட்டை உருவாக்க அனைவரும் உழைக்க வேண்டும்!

*-கட்சித் தொண்டர்களுக்கு சோனியா காந்தி வேண்டு கோள்.*

மகாத்மா காந்தி விரும்பிய சமத்துவம் மற்றும் மதசார்பற்ற நாட்டை உருவாக்க அனைவரும் உழைக்க வேண்டும். இவ்வாறு காங்கிரஸ் கட்சியின் தலைவர் கட்சியின் பத்திரிகை மூலம் அனைத்து தொண்டர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கும் போது.

குறைந்தபட்ச பொதுச் செயற் திட்டத்தை நிறைவேற்றுவதில் காங்கிரஸ் உறுதியாக இருப்பதை மத்திய வரவு செலவுத்திட்டம் காட்டுகிறது என்று சோனியா காந்தி கூறினார். காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கட்சிப் பத்திரிகை மூலம் காங்கிரஸ் தொண்டர்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

" காங்கிரஸ் கட்சி வறுமையை ஒழிக்க உறுதி பூண்டுள்ளது இதற்காக விவசாயம் சுகாதாரம், கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. சாதாரண நடுத்தர மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைய முயற்சி எடுக்கப் பட்டுள்ளது.

நமது பிரதமரும் நிதி அமைச்சரும் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்கிறார்கள். இந்தக் கொள்கையில் காங்கிரஸ் உறுதியாக இருப்பதை மத்திய வரவு செலவுத்திட்டம் காட்டுகின்றது.

பொருளாதார பலன் பரவலாக அனைவருக்கும் கிடைக்கும் வகையில் அரசின் கொள்கை இருப்பது அவசியமாகிறது அதே நேரத்தில் கொள்கையை அமுல்படுத்தும் போது உலக சந்தையில் சிறந்த இலக்கையடையும் வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். நடுத்தர ஏழை மக்களுக்கு பணியாற்றுவதே காங்கிரஸ் கட்சியின் கொள்கை இந்த முழக்கமே நமது நோக்கம் எனவே கட்சித் தொண்டர்கள் அரசின் திட்டங்கள் ஏழை மக்களுக்கு சென்றடைகின்றனவா?" என்பதைக் கண் காணிக்க வேண்டும்.

மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், மானியம் போன்ற வற்றில் ஊழல் நடப்பதை தடுக்க வேண்டும். காங்கிரஸ் கட்சி மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள். எனவே மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும். அவற்றை நாம் செய்வதின் மூலம் மகாத்மா காந்தி விரும்பிய சமத்துவம், மதச்சார்பற்ற நாட்டை உருவாக்க உழைக்க வேண்டும் அரியானா தேர்தலில் கிடைத்த வெற்றி. காங்கிரஸ் ஒரு வலுவான இயக்கம் என்பதை நிரூபித்து இருக்கிறது அதே நேரத்தில் பீகார், ஜார்க்கண்ட் மாநிலங்களில் ஏன் பின்னடைவு ஏற்பட்டது? என்பது பற்றி ஆராயவேண்டும் எனவும் சோனியா காந்தி கூறியுள்ளார்.

# மணலுக்கடியில் புதையுண்ட கோவிலின் தொடர்ச்சி கடல் அடிவரை செல்கிறது

(சென்னை)

கடந்த வருடம் டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி பேரழிவின் மூலம் மாமல்லபுரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மணலுக்கு அடியில் புதையுண்டிருந்த கோவிலின் தொடர்ச்சியானது கடலுக்கு அடியிலும் இருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. தற்போதுமேற் கொள்ளப் பட்டு வரும் ஆராய்ச்சியின் முடிவுகள் மூலம் இது உறுதிப்படுத் தப்படுகின்றது.

மாமல்லபுரம் கடலோரத்தில் மணலில் புதையுண்டு போன கடற்கரைக் கோவிலைப் பற்றிய முழு விபரம் இன்னும் பத்து நாளில் தெரிய வரும் என்று தொல்லியல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஏ.கே திரிபாதி தெரிவித்தார். மாமல்லபுரத்தில் செவ்வாய்க்கிழமை அகழ்வாராய்ச்சிப் பணிகளை பார்வையிட்ட பிறகு அவர் தொடர்ந்து கூறும் போது

கடந்த ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி இப்பகுதியில் ஏற்பட்ட சுனாமி காரணமாக கடலோரப்பகுதியில் மணல் அரிக்கப்பட்டு சில சிற் பங்கள் வெளியே தெரிந்தன. இதைத தொடர்ந்து மத்திய தொல்லியல் துறை அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டது.

இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இப்பகுதியில் புதைந்துள்ளது கோவில் என்று தெரிய வந்துள்ளது. அதன் முழு விபரம் இன்னும் பத்து நாட்களில் தெரியவரும் தற்போது மேற் கொள் ளப் படும் அகழ்வாராய்ச்சிப் பணி களின் தொடர்ச்சியாக மேலும் சில பகுதிகளில் ஆய்வு செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியக் கடலோரக் கப்பல் படையின் உதவியுடன் கடலுக் கடியில் 15 தினங்கள் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. தேவைப்பட்டால் மேலும் ஆய்வுகள் தொடரும்.

# சேதுசமுத்திரத் திட்ட விடயத்தில் தமிழக அரசு மீது மத்திய நிதியமைச்சர் குற்றம் சுமத்துவது அதிர்ச்சியளிக்கிறது!

## -தமிழக முதல்வர் விசனம்

(சென்னை)

சேதுசமுத்திரத்திட்டத்தில் தமிழக அரசு மீது மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் வீணான குற்றம் சுமத்துவதாக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது வார இறுதியில் தமிழகம் வந்திருந்த ப.சிதம்பரம் தமிழக அரசு ஆதரவு அளிக்காததால்தான் சேது சமுத்திரத்திட்டம் தாமதமாவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டம் தொடர்பாக பிரதமர் அலுவலகம் சுற்றுச்சூழல் சார்ந்த கடுமையான தகவலைத் தெரிவித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பிரதமர் அலுவலகத்தால் அனுப்பப்பட்டதாகச் சொல்லப்படும் குறிப்புக்கு கப்பல் போக்குவரத்துச்சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைத்துறை அமைச்சகமோ சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகமோ பதில் அளிக்கவில்லை என்றும் பத்திரிகைச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

மத்திய அரசில் இத்திட்டம் தொடர்பாக ஒரு குழப்பம் நிலவும் நிலையில் தமிழக அரசின் மீது குற்றம் சுமத்தும் வீண்முயற்சியில் சிதம்பரம் ஈடுபட்டுள்ளதானது கவலையளிக்கின்றது.

இத்திட்டம் தொடர்பாக இந்த அரசு பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் தொடர்பான எல்லா சுற்றுச்சூழல் நிலைமைகள் குறித்தும் ஆய்வு செய்து தீர்வு காணஎடுத்துக் கொள்ளப்படும் காலத்தை தாமதம் என்று கூறி அரசியல் ஆதாயம் தேட சிதம்பரம் முயற்சிற்பது அதிர்ச்சியைத் தருகிறது.

சேது சமுத்திரத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் தமிழக அரசிற்கு மாற்றுக் கருத்தில்லை. அதேவேளை சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சினைகளையும் முறையாக ஆய்வு செய்து தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டியதும் அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தது.

# தேசிய பாதுகாப்புக் குறித்து முடிவுகள் எடுக்க மாநில முதல்வர்களுடன் முக்கிய மாநாடு

## -பிரதமர் மன்மோகன்சிங் தலைமை வகிப்பார்

தேசிய பாதுகாப்புப் பற்றியதான முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு மாநில முதல்வர்கள் மாநாடு எதிர் வரும் 15ஆம் திகதி பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்காக மாநில முதல்வர்களுடனான ஆலோசனைக்கூட்டம் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்றது. இதிலே வட மாநிலங்களைச் சேர்ந்த முதல்வர்கள் கலந்து கொண்டனர்.

இக் கூட்டம் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ்பட்டேல் கூறும்போது;

நடைபெறவிருக்கும் அனைத்து மாநிலங்களின் முதல்வர்களுடனான மாநாட்டில் தேசியபாதுகாப்பு தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும்.

வகுப்புவாத வன்முறை செயல்களை ஒழிப்பது தொடர்பான திட்டப் பிரேரணை ஒன்று மத்திய சட்டத் துறை அமைச்சகத்தில் இருந்து உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பி வைக்கப் படவுள்ளது. இது தற்போது பரிசீல னையில் இருந்து வருகிறது. இத்திட்டத்தில் மாற்றங்கள் செய்யப் பட வேண்டுமா என்பதைக் கண்டறிய இப்பிரேரணை பொது விவாதத்திற்கு விடப்படும். அத்துடன் இயற்கைப் பேரழிவு நிர்வாக ஆணைக்குழு அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. மாநில அரசுகள் நிவாரணம் வழங்குதல், மனிதநேயப்பணிகளில் ஈடுபடும் பல்வேறு தொண்டர் நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயற்படவும் இது துணைபுரியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



இரண்டு நாட்களுக்கு முன் சுமாத்திராவில் ஏற்பட்ட நில அதிர்வினால் திருச்செந்தூர் கடல் சுமார் 60 அடிக்கு உள்வாங்கியுள்ளதை படத்தில் காணலாம்.

# அனுபவம் இல்லை என்ற கருத்தை தகர்த்தெறிந்தது இன்சமாம் அணி


-அக்ரம்

அனுபவம் இல்லை என்ற கருத்தைத் தகர்த்தெறிந்துவிட்டது இன்சமாம் உல்ஹக் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி. பெங்களூர் வெற்றியே அதற்குச்சாட்சி. கடைசி நாள் ஆட்டத்தின் போது போட்டியை ஜெயிக்கவேண்டும் என்ற வெறியில் பாகிஸ்தான் விளையாடியது. ஆகவே. அவர்கள் தன்னம்பிக்கையுடன் ஆட முடிந்தது. என்கிறார் பாகிஸ்தான் முன்னாள் வீரர் வசீம் அக்ரம்.

இந்தியாவுக்கு எதிரான போட்டியென்றால், முன்பெல்லாம், சச்சினை ஆட்டமிழக்கச்செய்தால் போதும் ஜெயித்து விடலாம்! என்று எதிரணிகள் முயற்சி செய்யும், சச்சினுக்குப் பதில் இப்போது சேவாக் இந்தத் தொடரில் பிரமாதமாக ஆடினார். யுனிஸ்கான் ஆட்டமும் அருமை மிகுந்த தன்னம் பிக்கையை அவர் ஆட்டத்தில் காண முடிந்தது.

இந்திய அணித்தலைவர் சவுரவ் கங்குலியின் ஆட்டம் இந்தத் தொடரில் படுமோசம். ஒரு தலைவர் என்றால், சகல விதங்களிலும் அணி வீரர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். இதற்கு இன்சமாம் உல்ஹக் மிகச்சிறந்த உதாரணம். மோசமான துடுப்பாட்டத் திறமையால் தலைவராகவும் இனி சவுரவ் ஜொலிக்க முடியுமா என்பது சந்தேகமே!

# வீரர்கள் குழப்பமடையத் தேவையில்லை புதிய தலைவர் சந்தர்போல் தெரிவிப்பு



இன்று நடைபெறும் தென்னாபிரிக்க அணியுடனான முதலாவது டெஸ்ட்போட்டியில் எவ்வித மேலதிக பலத்தையும் எதிர்பார்த்து குழப்ப மடையப் போவதில்லை என மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் புதிய தலைவர் சிவ் நாராயன் சந்தர்போல் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தப் பிரச்சினை காரணமாக அணியின் முன்னாள் தலைவர் லாரா உட்பட முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் பங்குபற்றவில்லை என்ப தால் சந்தர் போலுக்கு கூடுதல் சுமை ஏற்பட்டிருக்கலாம் என்று கருதும் நிலையில் அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது; இது தனக்கு புதிய அனுபவமில்லை எனவும், முன்பும் பல போட்டிகளை வழி நடத்தியிருப்பதாகவும் கூறினார். மேற்கிந்திய தீவு அணி கடந்த வருடம் நடைபெற்ற மினி உலக கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தாலும் அதன் பின்னர் டெஸ்ட் போட்டிகளில் பிரகாசிக்கத் தவறியது.ஆகவே இத் தொடர் சந்தர் போலுக்கு கூடுதல் பொறுப்பு வாய்ந்த தொடராகும்.

# விமர்சனங்களுக்கு வெற்றியே எங்கள் பதில்



-இன்சமாம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மீது விமர்சகர்கள் தெரிவித்த எதிர்மறைக் கருத்துக்களுக்கு பெங்களூர் வெற்றியே எங்கள் பதில் என்கிறார் இன்சமாம் உல்ஹக்.

இந்தியப்பயணம் தொடங்கும் போதே பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு பல திசைகளில் இருந்தும் கடுமையான விமர்சனங்கள் வந்தன. திறமையற்றவீரர்கள். அனுபவமற்ற அணி, அக்தர் இல்லாமல் சாதிக்கமுடியாது. இன்சமாமின் தலைமைத்துவம் சரியில்லை." இப்படி நிறைய நிறைய விமர்சனங்கள் இவற்றில் பெரும்பான்மை அவர்களின் சொந்த நாட்டில் இருந்தே வந்தது தான் இன்னும் பரிதாபம்.

பெங்களூர் வெற்றி மூலம் விமர்சனங்களுக்கு பாகிஸ்தான் அணி அழுத்தமான முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது. அந்த அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக், ஐதராபாத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

எப்போதும் விமர்சித்துக் கொண்டிருப்பதுதான் விமர்சகர்களின் வேலை. விளையாட்டில் கவனம் செலுத்தித் திறமை காட்டுவதே கிரிக்கெட் வீரர்களாகிய எங்கள் வேலை. எங்கள் மீதான விமர்சனங்களுக்கு பெங்களூரில் கிடைத்த வெற்றிதான் பதில்.வேறு எதுவும் சொல்ல விரும்பவில்லை என்றார். அமைதியாக!



இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆறாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி டில்லியில் அடுத்தமாதம் 17 இல் நடக்கவுள்ளது இந்தப் போட்டியைக் காண பாக். அதிபர் முஷாரப் வருகிறார். இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆராய்வதற்காக டில்லி வந்த பாக். கிரிக்கெட் சபைத் தலைவர் ஷாரியார்கான் (இடது) பெரோஷா கோட்லா மைதானத்தைப் பார்வையிடுகிறார்.

# டி.டி.யில் நேரடி ஒளி பரப்பு

இந்திய-பாக் கிரிக்கெட் போட்டிகள் டி.டி.யில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது.இந்திய- பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகள் ஆறு போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் மோதவுள்ளன.. முதல் ஆட்டம் ஏப்ரல் இரண்டாம் திகதி கொச்சியில் நடக்கிறது. மற்ற மோதல்கள் விசாகபட்டினம், ஜாம்ஷெட்பூர், அகமதாபாத், கான்பூர், டில்லி ஆகிய நகரங்களில் நடக்கவுள்ளன. ஏப்ரல் 17 ஆம் திகதி கடைசி ஆட்டம் நடக்க இருக்கிறது. இதன் பின்னர் பாகிஸ்தான் அணி சொந்த நாட்டுக்குப் புறப்பட்டுச் செல்கிறது.

# எனது திறமையை யாரிடமும் நிரூபிக்கவேண்டிய அவசியமில்லை


கங்குலி

"இந்திய கிரிக்கெட் தலைவராக மிக நீண்டகாலம் பொறுப்புவகிக்கிறேன். எனது திறமையையாரிடமும் நிரூபிக்கவேண்டிய அவசியமில்லை." என்கிறார் சவுரவ் கங்குலி. பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய கிரிக்கெட் தலைவர் சவுரவ் கங்குலியின் செயற்பாடுகள் படுமோசம் மூன்று போட்டிகளும் சேர்த்து அவர் மொத்தம் எடுத்தது 48 ஓட்டங்கள் (சராசரி-9.6) குறிப்பாக, பெங்களூர் டெஸ்ட் போட்டியில் அவரது பொறுப்பற்ற துடுப்பாட்டம் தோல்விக்கு வழிவகுத்து விட்டது. தலைவர் பொறுப்பில் இருந்து அவரை உடனடியாக நீக்கவேண்டும் என்ற குரல்கள் பல திசைகளில் இருந்தும் கிளம்புகின்றன.

இதுபற்றிக் கேட்டபோது,பதிலளித்த சவுரவ் கங்குலி, "நான் தலைவரா இல்லையா என்பது முக்கியமில்லை. ஒரு துடுப்பாட்டவீரராக நிறையவோட்டங்கள் குவிக்கவேண்டும் அது முக்கியம என்பதை நன்கு உணர்ந்திருக்கிறேன். ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் இருந்தே முழுத் திறமையையும் காட்டி ஓட்டங்களைக் குவிப்பேன். மற்றபடி தலைவர் பதவி பறிபோய் விடும் என்றெல்லாம் கவலைப்படவில்லை. இந்தியக் கிரிக்கெட் தலைவராக நீண்டகாலம் பணி புரிந்திருக்கிறேன். எனது திறமையை யாரிடமும் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை தலைவர் பொறுப்பில் நான் நீடிப்பதா இல்லையா என்பதை தேர்வுக்குழுவினர்தான் முடிவு செய்யவேண்டும்." என்றும் தெரிவித்தார்.

# தரவரிசையில் கோட்டை விட்டது இந்தியா ராவிட் இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டார்

சர்வதேச கிரிக்கெட் தரவரிசை பட்டியல் தற்போது ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பை உண்டாக்கியுள்ளது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அடுத்தடுத்து பல வெற்றிகளைப் பெற்றுவரும் அவுஸ்திரேலியா தொடர்ந்து முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது. பாகிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்ற இந்தியா பின்னர்பெங்களூர் ஆட்டத்தில் தோல்வியடைந்தது. இதன் காரணமாக இந்தியா-பாகிஸ்தான் டெஸ்ட் தொடர்1-1 என்ற புள்ளியில் சமநிலை பெற்றது. ஒருவேளை இந்த தொடரை இந்தியா கைப்பற்றியிருந்தால் இரண்டாவது இடத்துக்கு முன்னேறி இருந்திருக்கும். சிறப்பான இந்த வாய்ப்பை இந்திய வீரர்கள் கோட்டைவிட்டனர். 108 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் இருந்த இந்தியா தற்போது ஒருபுள்ளியை இழந்துள்ளது. ஆனாலும் இந்தியாவின் தரவரிசையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. 101 புள்ளியில் இருந்த பாகிஸ் தான் ஒரு புள்ளி பெற்று தொடர்ந்து ஐந்தாவது இடத்தைத் தக்கவைத்துள்ளது. இங்கிலாந்து அணி இரண்டாவது இடத்தில் நீடிக்கிறது. தனிப்பட்ட வீரர்கள் என்று பார்க்கும்போது துடுப்பாட்டத்தில் தென் ஆபிரிக்க நட்சத்திர ஆட்டக்காரர் கலிஸ் 886 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். பெங்களூர் டெஸ்ட் போட்டிக்கு முன்பாக ராவிட் முதலிடத்தில் இருந்தார். ஆனால் பாகிஸ்தான் அணிக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் அவர் சரியாக ஆடவில்லை. இதனால் அவரின் புள்ளியில் அதிரடியாக சரிவு ஏற்பட்டது. இந்த சரிவின் காரணமாக ராவிட் மீண்டும் இரண்டாவது இடத்திற்குத்தள்ளப்பட்டார். பந்து வீச்சில் மெக்ராத், முரளிதரன், போலக், அக்தர், வோன் ஆகியோர் முன்னணியில் உள்ளனர்.

-ரஸ்டாக் 100 டெனினில்-

# செரினாவின் ஆதிக்கத்துக்கு சகோதரி வீனஸ் முடிவுகட்டினார்



அமெரிக்காவில் நடைபெறும் ரஸ்டாக்-100 டெனிஸ் தொடரை மூன்று வருடங்களாக சுவீகரித்திருந்த செரினா வில்லியம்சின் ஆதிக்கத்தை அவரது சகோதரி வீனஸ் வில்லியம்ஸ் கைப்பற்றிவிட்டார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தொடரின் காலிறுதிப் போட்டியில் வில்லியம்ஸ் சகோதரிகள் மோதினர். மிக பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் செரினா வில்லியம்ஸ் வீனஸ் வில்லியம்சிடம்.6-1,7-6(10-8) என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தார். மேலும் ஒரு போட்டியில் உலகத் தரவரிசையில் முதலாமிடம் பெற்ற யஸ்ரின் கெனினை மரியாசரபோவா 6-1,6-7, (6-8),6-2 என்ற செட்கணக்கில் வென்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றார்.

# இன்றைய கால்பந்துப் போட்டிகள்

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் விபரம் வருமாறு:-

வலிகாமம் லீக்கைச்சேர்ந்த யங்கென்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து காளியம்மாள் விளையாட்டுக் கழகமும்,




வலிகாமம் லீக்கைச்சேர்ந்த இளம் தென்றல் விளையாட்டுக்கழகம் எதிர் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த முல்லை விளையாட்டுக் கழகமும் விளையாடவுள்ளன. (41)

# கரைச்சி பிரதேச மென்பந்துப்போட்டி அரையிறுதி ,இறுதிப்போட்டிகள் இன்று

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின் ஆறு பேர் கொண்ட மென் பந்து கிரிக்கெட் போட்டி கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதன் இறுதிப்போட்டி இன்று நடைபெறவுள்ளது.

நேற்றைய போட்டியில் மத்தியதீரர் விளையாட்டுக் கழகமும் ஸ்கந்தா விளையாட்டுக் கழகமும், அரையிறுதிப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

இதேபோன்று கனகபுரம் விளையாட்டுக்கழகமும், இளந்தென்றல் விளையாட்டுக் கழகமும், N.E.C விளையாட்டுக்கழகமும்,உதயதாரகை விளையாட்டுக் கழகமும் காலிறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன.

நேற்றைய போட்டிக்கு நடுவர்களாக S.K தர்ம குலசிங்கம், பூ..சுபானந், தனபாலன் ஆகியோர் கடமையாற்றினர். (கு)



இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் அசாருதீன் ஐதராபாத்தில் உடற்பயிற்சி மையம் வைத்துள்ளார். அங்கு சென்ற பாகிஸ்தான் வீரர் யூனுஸ்கான் அவருடன் இருப்பதைப் படத்தில் காணலாம். அருகில் அசாருதீன் மனைவி சங்கீதா பிஜிலானி உள்ளார்.

## சிந்தனைக்கு



பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதமாகவே, கரும்புலிகளை நான் உருவாக்கியுள்ளேன்

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 31-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# தவறாக மதிப்பிட வேண்டாம்!

ஒஸ்திரியா தலைநகர் வியன்னாவில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்மைச் சந்தித்த அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தாக்குதல்கள் குறித்து தமது விசனத்தைத் தெரிவித்துக்கொண்டுள்ளார்.

அண்மைக்காலத்தில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப்புலிப் போராளிகள் மீதும் அவர்களின் அலுவலகங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுவதென்பது வழமையான சம்பவங்களாகிவிட்டன. இந்த வகையில் இவ் வாரத் தொடக்கத்தில் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் உட்பட பலபோராளிகள் விசேட அதிரடிப்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இதேவேளை வவுனியா மாவட்ட அரசியல்துறைச் செயலகம் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இது ஒருபுறம் இருக்க விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், ஊடுருவல் நடத்தி சில நாசகாரச் செயல்களில் ஈடுபடுவதில் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். இதற்கு தமிழ் தேச விரோதக் குழுக்களை அவர்கள் பயன்படுத்தியும் வருகின்றனர். இந்தவகையில் புலிபாய்ந்த கல்பகுதியில் இருபோராளிகள் இவ்வாரத் தொடக்கத்தில் வெட்டிக்கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தகைய சம்பவங்கள் யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் என்பதில் எந்தகைய கேள்விகளுக்கும் இடமில்லை. இதனை யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு தனது விசாரணை மூலம் கண்டறிகின்றதோ இல்லையோ, இவைவிடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சீற்றம் கொள்ளச்செய்யும் செயல்களாகும். ஆகையால் இத்தகைய செயல்கள் கட்டுப்படுத்தப்படாது போனால் யுத்த நிறுத்தக்கண்காணிப்பின் தேவையும் சேவையும் அர்த்தமற்றவையாகி விடும்.

விடுதலைப்புலிகள் இயக்கம் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பின் யுத்த நிறுத்த மீறல் செயற்பாடுகள் குறித்து தொடர்ச்சியாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடமும் சமாதான ஏற்பாட்டாளர்களான நோர்வேத் தரப்பினரிடமும் முறையிட்ட வண்ணமே உள்ளனர். ஆனால் இவ்விடயத்தில் முன்னேற்றம் ஏதும் காணப்படவில்லை. அதாவது இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவால் கட்டுப்படுத்த முடியவில்லை. அன்றி இடம் பெறும் சம்பவங்கள் குறித்து தெளிவான அறிவிப்பை அவர்களால் வெளியிடவும் முடியவில்லை.

ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கம் தம் மீதான தாக்குதல்கள், தமது அலுவலகங்கள் மீதான தாக்குதல்கள் என்பன குறித்து எத்தனை காலம் முறையிடுவதுடன் மட்டும் நின்றுகொள்ள முடியும்? அவ்வாறு விடுதலைப்புலிகள் நின்றுவிடுவதென்பது விடுதலைப்புலிகள்இயக்கம் தம்மைத்தாமே அழித்துக்கொள்வதாகிவிடாதா?

விடுதலைப்புலிகள் இயக்ம் இம்முறை காக்கும் பொறுமையானது பலருக்கும் ஆச்சரியம் அளிக்கும் ஒன்றாகும். ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கம் இவ்வாறு பொறுமை காப்பதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. அதாவது கடந்தகாலத்தில் நியாயம் தம்பக்கம் இருந்த போதும் விடுதலைப்புலிகள் இயக்கம் பொறுமை காக்காததினால் யுத்தத்திற்கான அனைத்துப்பொறுப்பையும் அதுவே ஏற்க வேண்டியிருந்தது..

அதாவது சிறிலங்கா ஆட்சியாளர்களின் அடாவடித்தனங்கள் சமாதானத்திற்கு விரோதமான செயல்முறைகள் யுத்தநிறுத்தத்திற்கு எதிரான செயல்கள் என்பன உலகம் அறியப்படாமலே விடுதலைப்புலிகளே யுத்தத்திற்குக் காரணம் என்ற சிறிலங்கா அரசின் பிரச்சாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகியது.

ஆனால் இம்முறை அத்தவறினைவிடப் புலிகள் இயக்கம் தயாராக இல்லை. விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதானத்திற்கும், யுத்தநிறுத்தத்திற்கும் எதிரான செயல்முறை குறித்து சர்வதேச சமூகத்திற்கு விளக்கமுற்பட்டுள்ளனர். அதாவது சமாதானத்திற்கென அர்ப்பணிப்பைச் செய்யத் தயாராக இருக்கின்றபோதும் யுத்தம் தம்மீது திணிக்கப்படுவதாக உலகிற்குத் தெளிவு படுத்தப்புலிகள் முற்பட்டுள்ளனர்.

ஆனால் இதில் விடுதலைப்புலிகளினால் எத்தனைதூரம் வெற்றி அடைய முடியும்? சர்வதேச நாடுகள் தமது தேச நலன்கள், பூகோளநலன்கள் என்பனவற்றிக்கும் அப்பால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை விளங்கிக்கொண்டு தார்மீக ஆதரவையாவது அளிக்கமுன் வருமா? என்பதெல்லாம் வேறு விடயம். ஆனால் ஒன்று விடுதலைப்புலிகள் இயக்கம் மேலும் மேலும் தொடர்ந்தும் இத்தகையதொரு போக்கையே கடைப்பிடிக்கும் என யாராவது எதிர்பார்ப்பார்களேயானால் அவர்கள் ஏமாற்றமே அடைவார்கள்.

ஏனெனில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. விடுதலைப்புலிகளையும், தமிழ்மக்களையும் தொடர்ந்து சீண்டுவதென்பது ஏற்புடையதொன்றாக இருக்க மாட்டாது. இதனை யாராவது மறந்தால் அன்றிக்கருத்தில் கொள்ளாது போனால் எதிர்கால நிகழ்வுகளுக்கும் அவர்களே பொறுப்பேற்க வேண்டியவர்களாக இருப்பார்கள்.

# ஆழிப்பேரலை எச்சரிக்கையை அடுத்து அதிர்ச்சி, விபத்தில் 10 பேர் மரணம்

ஆழிப்பேரலை எச்சரிக்கையின் போது இலங்கைத் தீவகத்தில் பத்து பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த திங்களன்று இரவு விடுக்கப்பட்ட ஆழிப்பேரலை முன் எச்சரிக்கையைத் தொடர்ந்து அதிர்ச்சி மற்றும் விபத்துக்களில் பத்து பேர் உயிரிழந்துள்ளனர். அட்டாளைச்சேனை, பெரிய நீலாவணை, சம்மாந்துறை, பாணந்துறை, கொஸ்கொடை, ஹெந்தளை, பானம, முகத்துவாரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 10 பேர் உயிரிழந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எச்சரிக்கை விடுக்கப்பட்டதையடுத்து அதிர்ச்சியில் மயக்கமடைந்த மொறட்டுவை கொரலவெல்லவைச் சேர்ந்த 72 வயது தெல்கே ஹெரியட் பீரிஸ் என்ற பெண்மணி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கையில் மரணமடைந்துள்ளார். பாணந்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கே.கே. மில்டன் பீரிஸ் என்பவர் ஆழிப்பேரலை வரப்போவதாக தகவல் அறிந்தவுடன் மருத்துவமனையிலிருந்து வெளியேறிச் செல்லும் போது பாதையில் மயங்கி விழுந்து அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார். களுத்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்த சிறிசேன பீரிஸ் என்பவர் தகவல் அறிந்ததும் அச்சமடைந்து தனது வீட்டுத் தோட்டத்திலுள்ள மரத்தில் தூக்கு மாட்டி இறந்துள்ளார். அட்டாளைச்சேனை 7 ஆம் குறிச்சியைச் சேர்ந்த 73 வயதான வெள்ளைத்தம்பி மற்றும் 13 ஆம் குறிச்சியைச் சேர்ந்த 60 வயதான ஷக்கினா உம்மா ஆகியோர் மாரடைப்பால் மரணமடைந்துள்ளனர். பெரிய நீலாவணையைச் சேர்ந்த வைரவன் தங்கபிள்ளை எனும் 55 வயதுப் பெண்மணி பாதுகாப்பான இடம் தேடி ஓடுகையில் கீழே விழுந்ததில் கல்லில் தலை மோதியதால் மரணமானார். கொஸ்கொடையைச் சேர்ந்த 77 வயது வில்வன் மெண்டிஸ் மற்றும் முகத்துவாரத்தைச் சேர்ந்த கேத்தன் பெரேரா ஆகியோர் ஓடும் போது கீழே விழுந்ததில் உயிரிழந்துள்ளனர். ஹெந்தளையைச் சேர்ந்த ஏ.ஜெனட் எனப்படும் 50 வயதுப் பெண், தொலைகாட்சியில் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தபோது மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்துள்ளார். சம்மாந்துறை மாவடிப்பள்ளியைச் சேர்ந்த மொஹிதீன் பிச்சை ரிபாய் எனும் 18 வயது பாடசாலை மாணவன் ஓடும் போது பாரஊர்தி மோதி உயிரிழந்துள்ளார்.

## செங்கடலில் மீட்கப்பட்ட இலங்கையர்;

# சட்ட விரோதமாக வெளி நாடனுப்பியவர் சிறிலங்காப் பொலிசாரால் கைது

செங்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கையர்களை சிறிலங்காவிலிருந்து சட்ட விரோதமாக அனுப்பியதாகக் கூறப்படும் சந்தேக நபரை குற்றப்புலனாய்வுப்பிரிவினர் கைது செய்துள்ளார்கள்.

இவர் வென்னப்புவ பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரியவருகின்றது. இச்சம்பவத்தோடு தொடர்புடைய மேலும் நால்வர் குறித்து தகவல்கள் கிடைத்திருப்பதாக குற்றப்புலனாய்வுப்பிரிவின் முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எகிப்து சென்றுள்ள விசேட பொலிஸ் குழு மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து இத்தகவல்கள் கிடைத்துள்ளன. 137 இலங்கையர்கள் செங்கடல் பகுதியில் தத்தளித்துக் கொண்டிருந்ததாக பொலிசார் தெரிவித்தனர். இவர்களில் அதிகமானோர் நீர்கொழும்பைச் சேர்ந்தவர்களாவர். (32)

## ஊவா மாகாணத்தில் ஏற்பட்டுள்ள

# இனந்தெரியாத நோய் தொடர்பில் கொழும்பு சுகாதார ஆய்வு மையம் விசாரணை

(கொழும்பு)

ஊவாமாகாணத்தில் ஏற்பட்டுள்ள இனம் தெரியாத நோய் தொடர்பில் கொழும்பு சுகாதார ஆய்வுமையமும் தொற்று நோய்கள் தொடர்பான விசேட பிரிவும் தமது பரிசோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. ஊவாப் பரனகம மஸ்பன்னை வித்தியாலயத்தின் உப அதிபரும், இரு மாணவர்களும் திடீரென மயக்கமடைந்து உயிரிழந்துள்ளமை தொடர்பில் மாகாண சுகாதார அமைச்சினால் விசாரணைகள் நடத்தப்பட்டாலும், இந்த மரணங்களுக்கான காரணங்கள் தெளிவாகக் கண்டுபிடிக்கப்படாததன் காரணமாக மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கிடையே இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் பயன்படுத்தும் குடிநீர் மூலமே இந்த நோய் பரவுவதாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# மட்டு. வைத்தியசாலை தொண்டர் ஊழியர் போராட்டம்

மட்டக்களப்பு வைத்திய சாலைகளில் கடமைபுரியும் தொண்டர் சிற்றூழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றை நடத்தினர். திருகோணமலை மாகாண சுகாதார அமைச்சகத்தின் முன் தம்மை நிரந்தரமாக்கக் கோரி 150 வரையிலான ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். பின்னர் .இவர்களின் பிரதிநிதிகளுக்கும், மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கும் அமைச்சின் அலுவலகத்தில் நடந்த பேச்சுவார்த்தையில் நிரந்தரமாக்குவதற்கான உறுதிமொழியை வழங்கியதனை அடுத்துப் போராட்டத்தை ஊழியர்கள் கைவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# அரசாங்கமோ, ஜே.வி.பி.யோ எடுக்கும் தீர்மானத்துக்கு ஒத்துழைக்கோம்

## மின்சார சபை தொழிற்சங்கக்கூட்டமைப்பு தெரிவிப்பு

மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பாக அரசாங்கமோ, ஜே.வி.பியோ எடுக்கின்ற தீர்மானங்களுக்கு நாம் ஒத்துழைக்க மாட்டோம் என மின்சார சபை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள மின்சாரசபை சட்டமூலத்தையும் ரத்துச் செய்வதே தமது நிலைப்பாடு என கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மின்சாரசபையை நிறுவனமாக்குவதற்கு அரசு மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் தற்காலிகமாக மட்டும் நிறுத்தப்பட்டுள்ளதென மின்சாரசபை ஊழியர் சங்கத்தின் பிரதான செயலாளர் தெரிவித்துள்ளதுடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக அரசு இரகசியமாகச் செயற்பட்டு வருகிறதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றுக்கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சகோதரி சந்திரிகா சனாதிபதியாக இன்னும் ஆறு வருடங்கள் பதவியிலிருப்பார்

## தான் கூறியது பொய்க்காது என்கிறார் அநுரா

அடுத்த சனாதிபதித் தேர்தல் எப்போது நடக்கும் என்ற குழப்ப நிலை தோன்றியுள்ள தற்போதைய நிலையில் அமைச்சர் அநுரா பண்டார நாயக்கா தனது சகோதரியான சந்திரிகா இன்னும் ஆறு வருடங்களுக்குப் பதவியிலிருப்பார் எனத் தெரிவித்துள்ளார்.

கம்பகாவில் கிராம அபிவிருத்தி அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போது அவர் மேலும் கூறுகையில், ஐ.தே.கட்சி பதவிக்கு வருவதற்கு இன்னும் 20 வருடங்கள் காத்திருக்க வேண்டும் என்றும், தான் கூறுவது ஒரு போதும் பொய்யானதில்லை என்றும் ஆருடம் கூறினார். எஸ்.பி.திஸாநாயக்க சிறை செல்வார் என்றும் ஐ.தே.மு அரசாங்கம் வீடு செல்வோர் என்றும் தான் கூறியதும் உண்மையாகியது. அது போல இதுவும் உண்மையாகும் எனவும் இந்த ஐ.ம.சு முன்னணி கூட்டரசாங்கம் ஒரு போதும் பிளவுபடாது எனவும் தெரிவித்த அவர், ரணில் விக்கிரமசிங்க 20 வருடங்கள் காத்திருக்க வேண்டும் என்றும் கூறினார். இதன்போது வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை ஏன் இந்த அரசினால் கட்டுப்படுத்த முடியாது என்ற கேள்விக்கு எரிபொருள் விலை 30 டொலரில் இருந்து 60 டொலர் வரை அதிகரித்திருப்பதால் அரசு விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது உள்ளதாகப் பதிலளித்தார்.

# ஆண்களுக்கான உளவளத்துணை நிலையம்
# அக்கராயனில் நேற்றுத் திறந்துவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி அக்கராயனில் "சந்தோசம்" ஆண்களுக்கான உள வளத்துணை நிலையம் நேற்றுப் பகல் 10.30மணிக்குத் திறந்து வைக்கப்பெற்றது.

திருமுறிகண்டி ஆலயபரிபாலன சபை இணைப்பாளர் சபாரட்ணம்



தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை த.பு.க.சிறுவர் நலன் திட்டப்பணிப்பாளர் ரவி ஏற்றிவைக்க, மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழீழத்தேசியக்கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் ஏற்றிவைத்தார். அடுத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறைவேற்றுப் பணிப் பாளர் ரீகன் ஏற்றிவைக்க, நிலைய கட்டடப் பெயர்பலகையினை மாவீரர், போராளிகள் குடும்பநலன்காப்பக பொறுப்பாளர் திருக்குமரன் திரை நீக்கம் செய்துவைத்தார்.

அடுத்து நிலைய விடுதியினை அரசியல்துறை துணைப்பொறுப் பாளரும், அலுவலக கட்டடத்தினை அவுஸ்திரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த திருமதி. சிராணி பரராஜசிங்கமும், இளைப்பாற்று மண்டபத்தினை த.பு.க. ஊடகப் பணிப்பாளர் சங்கீதனும் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தனர்.

தலைமையுரையினைத்தொடர்ந்து சிறப்புரையினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன், த.பு.கழக பணிப்பாளர் கெங்காதரன், யோகர்சுவாமி திருவடி நிலைய முதியோர்இல்ல பொருளாளர் சாந்தலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

அமெரிக்காவில் வதியும் இராஜ ரட்ணம் குடும்பத்தினரின் நிதிப்பங் களிப்புடன் மேற்படி ஆண்களுக்கான உளவளத்துணை நிலையம் அமைக்கப்பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (சோ)

# ஆரோக்கியபுரம் பகுதியில்
# தாய்சேய் போசாக்கு நிலை[illegible]

(அலுவலக செய்தியாளர்)

தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் நோர்வே கிளையின் நிதியுதவியு[illegible] அக்கராயன் ஆரோக்கியபுரத்தில் அமைக்கப்பெற்ற தாய்சேய் போசா[illegible] நிலையத்தின் புதிய கட்டடத்திறப்புவிழா நிகழ்வு நேற்று நண்பகல் 11[illegible] மணிக்கு நிலைய துணைத்தலைவர் சபாரட்ணம் தலைமையி[illegible] நடைபெற்றது.



மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான மேற்படி நிகழ்வில் தமிழீழ[illegible] தேசியக்கொடியினை போராளி, மாவீரர் நலன் காப்பகப் பொறுப்பாள[illegible] திருக்குமரன் ஏற்றிவைக்க, தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை தமிழ[illegible] புனர்வாழ்வுக்கழக உதவிநிறைவேற்றுப்பணிப்பாளர் ரீகன் ஏற்றிவைத்தா[illegible] அகவணக்கத்தினைத் தொடர்ந்து பயனாளிகளின் விடுதியினை நோர்[illegible] தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச்சேர்ந்த திருமதி. சிராணி பரராஜசிங்க[illegible] சம்பிரதாயபூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்துவைத்தார். மேற்ப[illegible] நிலையத்தில் அமைக்கப்பெற்ற சிறுவர் பூங்காவினை தமிழீழ அரசியல்து[illegible] துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் நாடாவினை வெட்[illegible] திறந்து வைத்தார்.

தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரையினை தமிழீழ அரசி[illegible] துறைதுணைப்பொறுப்பாளர் சோ. தங்கன், அமைதிபுரம் பங்குத்தந்தை [illegible] பாலன் அடிகள், அக்கராயன் தென்னிந்திய திருச்சபை சௌந்தரராஜன் அடி[illegible] யோகர்சுவாமிகள், முதியோர் இல்ல பொருளாளர் சாந்தலிங்கம் ஆகியோர் நி[illegible] தியதுடன், நிலைய பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிக்கான வங்கிப[illegible] பணம்வைப்புச் செய்யப்பெற்ற வங்கிக்கணக்கு வைப்புச் புத்தகத் தி[illegible] கையளித்தனர். (சோ)

# சுனாமியின் போது இழந்த ஆவணங்களை வழங்க
# தமிழீழ மோ . போ. க. பிரிவின் விசேட செயலகங்கள்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தின்போது பயண அனுமதி அட்டை, குடும்ப அட்டை, தமிழீழ மோட்டார் ஊர்தி ஆவணங்களை இழந்தவர்களுக்கு மேற்படி ஆவணங்களை வழங்கும் வகையில் தமிழீழ மோட்டார். போக்கு வரத்துக் கண்காணிப்புப் பிரிவினரால் விசேட செயலகங்கள் அமைக்கப் பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

அந்த வகையில் முல்லைத்தீவு பிரதேச செயலகத்தில் வைத்து எதிர்வரும் ஆறாம் திகதியன்றும், மருதங்கேணி பிரதேச செயலகத்தில் வைத்து எதிர்வரும் எட்டாம் திகதி யன்றும் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளது.

எனவே மேற்படி அனர்த்தத்தின் காரணமாக ஆவணங்களை இழந்த வர்கள் குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் அந்தந்த செயலகங் களுக்குச் சமுகம் கொடுத்து ஆவணங்களைப் பெற்றுக்கொள் வதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ளும் வண்ணம் தமிழீழ போக்கு வரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் வேண்டியுள்ளனர். (சோ)

## தங்கவேலா...

அருகே அமர்த்தினர். அதன் பின்பு இயக்கத்திற்கு எதற்கு வந்தாய்? விரும்பியா வந்தாய்? எனக் கேள்விகள்கேட்டனர்.நான் கூறினேன் என்னுடையதேவைக்காக விடுதலைப் புலிகளுடன் இணைந்தேன் எனக் கூறியதும் என்னைத் தாக்க ஆரம் பித்தனர்.

கையாலும், காலாலும், கம்பாலும் சுற்றி வளைத்து தாக்கினர். சிறிது நேரம் உணர்வற்றுக்கிடந்தேன்.அதன் பின்பு பேருந்து ஒன்று வந்தது அதில் வந்த பயணிகளை இறக்கி இதில் இயக்கம் இருக்கின்றதா? என காட்டு என்றுகூறி மிரட்டினர். பின் போகச் சொன்னார்கள். அப்பொழுது என்னுடைய உந்துருளியை எடுத்துப் போகச் சென்ற வேளை வண்டியைத் தள்ளிக் கொண்டு நடந்து போ என்று கூறினர். இவ்வாறு ஜெயப்பிரகாஸ் தெரிவித்தார்.

# இங்கிலாந்து நிபுணரினால்[illegible]
# பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை[illegible]

இங்கிலாந்திலிருந்து வருகை தந்திருக்கும் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணரினால் புதுக்குடி யிருப்பு டாக்டர்பொன்னம்பலம் ஞாப கார்த்த மருத்துவமனையில் எதிர் வரும் சனிக்கிழமை பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைக் கிளினிக் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00வ[illegible] நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள[illegible] முக்கியமாக தழும்புகள், எரிகாய[illegible] களைத் தொடர்ந்த பாதிப்புக்க[illegible] போன்றவை உட்பட்ட பிரச்சினை[illegible] சத்திரசிகிச்சை மூலம் சீர்செய்[illegible] படவுள்ளன.

சனிக்கிழமை நடைபெறவுள்[illegible] கிளினிக்கில் தெரிவு செய்யப்ப[illegible] பவர்கள் தொடர்ந்து வரு[illegible] நாட்களில் சத்திரசிகிச்சைகள் மே[illegible] கொள்ளப்படுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படவுள்ளது. எனவே பயன் பெற விருவிரும்புவோர் இவ் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள் ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

## மின்...

ஒரு தேசியப் பிரச்சினை. புலி களின் அரசியல் விவகாரக் குழு வினர் ஐரோப்பிய நாடுகளின் தலை வர்களின் கவனத்திற்கு இப் பொதுக் கட்ட மைப்பு குறித்து விளக்கம் அளித்து வரும் இச்சூழலில் பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கே அரசு வேகம் காட்டவேண்டும் என்றும் பரராஜசிங்கம் கூறினார்.

## ஈ.பி.டி.பி...

தர்மலிங்கம் இளமாறன் என்பவரை இலக்குவைத்து இந்தத் தாக் குதல் மேற்கொள்ளபட்டதாகக் கூறப்படுகின்றது.தாக்குதலை மேற் கொண்டநபர்கள்பதுங்கியிருந்து முதலில் கைக்குண்டை வீசியபின்பு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், இந்த துப்பாக்கிப் பிரயோகத்தி லேயே குறிப்பிட்ட பொலிஸ் சார்ஜன்ட் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பின்லாந்து...

மற்றும் டிசம்பர் 26 ஆம் திகதிக்கு முன்னர் போரினால் சீரழிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதியானது ஆழிப் பேரலையால் மேலும் சிதை வடைந்து இருப்பதால் மீளமைப் பிற்கான பொதுக்கட்டமைப்பு உருவாக்குதல் ஆகியவை தொடர் பாக பின்லாந்து வெளியுறவுக் குழு விடம் சு.ப. தமிழ்ச்செல்வன் விளக் கினார். இச்சந்திப்பின்போது பின்லாந் தின் சர்வதேச விவகாரங்களுக்கான துறையின் இயக்குநர் கரிகர்ன்கோ, மனிதாபிமான உதவிகளுக்கான ஆலோசகர் திமோ கர்மாக்லியோ மற்றும் பின்லாந்து செஞ்சிலுவைச் சங்க திட்ட அலுவலர் திருமதி. அன்னா ஜான்பெர்க் ஆகியோர் உடனிருந்தனர்.

## இந்தியாவில்...

தலைநகரான சண்டிகாரில் ஆரம்ப மாகவுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு ஒரு வாரம் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. இம்மா நாட்டில் சோமவன்ச அமரசிங்க விசேட சொற்பொழிவொன்றை ஆற்றவுள்ளார். ஜே.வி.பி. தலைவ ருடன் அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், விவசாய, கால்நடை, நீர்ப்பாசன மற்றும் காணி பிரதிய மைச்சர் விமல்ரத்னாயக்கவும் இந்தியா சென்றுள்ளனர்.

## வடக்கு...

எந்தவித சுமுகமான நிலையும் உருவாகவில்லை. அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை மக்களின் வாழ்க்கையை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது. ஆழிப்பேரலை துயரங்கள் ஒரு மனித உரிமை மீறல் சம்பவம் இல்லாவிடிலும், சிறிலங்கா அரசு இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவித மனிதாபிமான உதவியும் செய்யாத காரணத்தால் இது ஒரு மனித உரிமை மீறலாக மாறியுள்ளது. தொடர்ந்து சர்வதேச சமூகத்தினால் கொடுக் கப்பட்ட எந்தவித நிவாரணங்களோ, நிதி உதவிகளோ வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்று வரை கிடைக்கப் பெறவில்லை.இலங்கைத்தீவில் ஆழிப்பேரலையால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் வடக்கு கிழக்கலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மாவட்டங்களேயாகும். இம் மாவட்டங்களில் உடனடி மீட்பு வேலைகளை தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும் இணைந்து செய்தனர். இங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் வேறு சில அரசசார் பற்ற நிறுவனங்களினாலுமே நிவாரணங்கள் கொடுக்கப் படுகிறது.சிறிலங்கா அரசு உண்மைக்குப் புறம்பான தகவல்களுடன் சர்வதேச பிரச்சாரத்தில் ஈடுபட்டு ள்ளது.ஐ.நா செயலாளர் நாயகம் அவர்கள் ஆழிப்பேரலை[illegible] பாதிப்புக்களை நேரில் பார்வையிட சிறிலங்காவிற்கு[illegible] விஜயம் செய்திருந்த பொழுது சிறிலங்கா அரச[illegible] கொபிஅனானை வடக்கு கிழக் கிற்கு செல்லவிடாத[illegible] தடுத்து நிறுத்தியிருந்தது. சிறிலங்கா அரசின் இ[illegible] செயற்பாடு ஐ.நா சபையின் அதிகாரப்பத்திரத்தி[illegible] சாரம் 100ஐ மீறிச் செயற்பட்டுள்ளது. இது மிகவு[illegible] கண்டனத்துக்குரிய விடயம். கொபிஅனானை[illegible] தொடர்ந்து சிறிலங்கா வந்த பல நாட்[illegible] தலைவர்களையும் வடக்குக் கிழக்கிற்கு விஜ[illegible] செய்யவிடாது சிறிலங்கா அரசு தடுத்[illegible] நிறுத்தியுள்ளது . ஓர் மனிதாபிமானமற்ற செயலா[illegible] இதேவேளை சிறிலங்கா அரசு பெரும்தொகைய[illegible] பணத்தைச் செலவழித்துஆயுதங்களைக் கொள்வ[illegible] செய்து போருக்குத் தன்னைத் தயார் செய்கிற[illegible] இலங்கைத்தீவில் வாழும் தமிழ்மக்கள் மீதா[illegible] அனுதாபம் சர்வதேச சமூகத்திற்கு இருந்தபோதும் அதை வெளிப்படையாக காட்டத் தயங்குவது மிகவு[illegible] கவலை தரும் விடயம். இதனாலேயே சிறிலங்க[illegible] அரசினால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் து[illegible] புறுத்தப்பட்டும் புறக்கணிக்கப்பட்டும் வருகிறார்கள். இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் கூட்டத்தொடரினால், இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்கள் ஏனைய மக்களைப்போல் சமனாக நடத்தப் படவேண்டும் என்று ஒரு கண்டனம் கொண்டுவருமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளும் அதேவேளை சர்வதேச சமூகத்திடம் நிவாரண உதவிகளை வடக்குக் கிழக்கு மக்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்க வேண்டிக்கொள்ளுமாறும் வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டுப்பற்றாளர்...

முன்னை நாள் அன்னையர் முன்னணியின் பொருளாளர் புலிஅக்கா அணிவித்தார். மணியம்மாவின் மகனான மாவீரர் 2 ஆம் லெப் ராஜ்குமாரின் திருவுருவப் படத்துக்கான மலர் மாலையை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ஈழவன் அணிவித்தார். மலர் வணக்கத்தினை முல்லை.பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் ஆரம்பித்து வைக்க, அனைவரும் மலர் வணக்கம் செலுத்தினார்கள். தலைமையுரையைத் தொடர்ந்து நினைவுரையை முல்லை. முன்னாள் அன்னையர் முன்னணியின் தலைவி திருமதி.ஞானாம்பிகை, பத்மவதி-கனகரட்ணம், விக்டர் அம்மா, ம.அன்ரனி ஜெகநாதன், அ.மரியராசா, வன்னிப் பாராளுமன்றஉறுப்பினர் ச.கனகரட்ணம், திருமதி. வித்தியா அருணாசலம், முல்லை பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர், முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், கடற்புலிகளின் முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ம.ரங்கன் ஆகியோர் வழங்கினார்கள் இந்நிகழ்வில் போராளிள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்விற்கு தமிழீழ அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் ஆகியோர் வருகை தந்து மலர்வணக்கம் செலுத்தினர்.(20)

## தந்தை...

ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி கே.சீனிவாசகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் உள்ளூர் பிரமுகர்கள் பலரும் உரையாற்றுகின்றனர்.

இதே நேரத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி தந்தை செல்வாவின் சிராத்த தினத்தை அனுஷ்டிக்கவும் அறங்காவல் சபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். அன்று வவுனியாவில் தந்தை செல்வாவின் உருவச்சிலை வைப வரீதியாகத் திரைநீக்கம் செய்துவைக்கப்படும்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது